Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, OCTOBER 15 2024

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 15, 2024 | ஒளி: 10 கதிர் 071 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

3.5 பில்லியன் ரூபாய் 'வற்' மோசடி

# மூவருக்கு சிறை



## பிணை வழங்கவும் மறுப்பு

## ஆஜராகாததால், நீதிமன்றம் பிடியாணையும் பிறப்பித்திருந்தது

அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய 3.5 பில்லியன் ரூபாய் (355 கோடி) பெறுமதி சேர் வரியை (வற்) செலுத்தத் தவறிய குற்றத்திற்காக டபிள்யூ.எம்.மெண்டிஸ் மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர்களான, அர்ஜுன் அலோசியஸ், ஏ.ஆர்.தினேந்திர ஜோன் மற்றும் பிரசன்ன குமாரசிறி டி சில்வா ஆகிய மூவருக்கும் கொழும்பு மேலதிக நீதவான் பண்டார இளங்கசிங்க, திங்கட்கிழமை (14) ஆறு மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த வரிகளைச் செலுத்துமாறு 11/14/2023 அன்று நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதிலும், குறித்த வரிகளைச் செலுத்தாத காரணத்தினால் இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதையடுத்து, பிரதிவாதிகள் நீதிமன்றில் ஆஜராகியதுடன், பிரதிவாதிகள் உரிய வரிப்பணத்தை இன்றைய தினம் (திங்கட்கிழமை 14) செலுத்தாவிடின், அவர்களுக்கு ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என நீதவான் அறிவித்துள்ளார்.

முன்னதாக பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், நீதிமன்றம் பிடியாணையும் பிறப்பித்துள்ளது.

2016 மற்றும் 2019க்கு இடையில் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய 3.5 பில்லியன் 'வற்' செலுத்துமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

தொடர்ச்சி P2

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

# மீளவும் நடக்காது


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீள நடத்தாமல் இருப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் திங்கட்கிழமை (14) காலை நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானித்துள்ளது.

அத்துடன், கசிந்ததாகக் கூறப்படும் மூன்று வினாக்களுக்கும் இலவச புள்ளிகளை வழங்குவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஏழு பேர் கொண்ட குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து திங்கட்கிழமை (14) இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டாம் என அக்குழு முடிவு செய்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

## ஜீப்பால் மோதி சிறுவனை கொன்ற கோடீஸ்வரனின் சிறிய மகன்



வர்த்தகர் ஒருவரின் 17 வயதான மகன் மிக வேகமாகச் செலுத்திய ஜீப் வண்டி, முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த சிறுவனைக் கொன்றுள்ள சம்பவமொன்று கம்பளையில் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.

கம்பளை பஸ் நிறுத்துமிடத்துக்கு முன்பாகவுள்ள பாதசாரி கடவைக்கு

தொடர்ச்சி P2



## "மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு"

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை திங்கட்கிழமை (14) சந்தித்தார்.

ஆட்சி நிர்வாகம், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் முறைமை என்பன தொடர்பில் இதன் போது முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டது. "பல் பரிமாண அபாய சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது மற்றும் இலங்கை மக்கள் மீதான அவற்றின் தாக்கம்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியினால் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில், இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டம் பூரண ஆதரவை வழங்கும் எனவும் பிரதிநிதி உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

## பொதுத் தேர்தலில் புத்திசாதுரியம் வேண்டும்

### நாடு பாரிய ஆபத்தில் சிக்கிக் கொள்ள வாய்ப்புள்ளது



பெரும்பான்மை நம்பிக்கையுடன் கூடிய சஜித் பிரேமதாசவின் தலைமையில் அரசாங்கத்தை அமைப்பதற்கு நாட்டு மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு இல்லையானால் நாடு பாரிய ஆபத்தில் சிக்கிக் கொள்ள வாய்ப்புள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## திருமண தோணி

களுத்துறை மாவட்டத்திலும் சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக குடா கங்கை பெருக்கெடுத்து, களுத்துறை வீதி மூழ்கியுள்ளமையால் புதுமண தம்பதியைத் தோணியில் அழைத்து வந்த சம்பவம் சத்தங்கொடை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

நிலவி வரும் சீரற்ற காலநிலையுடன், திருமண காருக்கு பதிலாக, அவர்கள் தோணியைப் பயன்படுத்தியுள்ளனர்.

இதைப் பார்த்த சிலர் அவர்களைக் கேலி செய்து வரும் நிலையில், எந்த ஒரு சூழ்நிலையும் தாங்கும், துணிச்சல் மிக்க பொருத்தமான ஜோடி என கூறி பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மேலும், களுத்துறை, புளத்சிங்கள, மதுராவல மற்றும் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளின் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மலையகத்தை 'தாயக்கட்டை' காக்கும்

■ க.கிஷாந்தன்

மலையகத்தில் இடம்பெறும் அத்துமீறல்களுக்கு எதிராக குரல்கொடுக்கும் 'தாயக்கட்டை' மலையகத்தைக் காக்கும் என்று நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் மலையக ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சட்டத்தரணி எஸ். விஜயகுமார் தெரிவித்தார்.

மலையக ஜனநாயக முன்னணியின் வேட்பாளர்கள் அறிமுக ஊடக சந்திப்பு ஹட்டன் 'டைன் அன் ரெஸ்ட்' விருந்தகத்தில் சனிக்கிழமை (12) நடைபெற்ற போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## காத்தான்குடி மாணவி பிரதமருக்கு மகஜர்



காத்தான்குடியில் இருந்து கொழும்புக்கு சைக்கிளில் வந்த 14 வயது மாணவி பாத்திமா நடா, பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் மகஜர் ஒன்றை திங்கட்கிழமை (14) காலை கையளித்துள்ளார்.

சிறுவர்கள் மற்றும் இளைஞர்களைப் பாதித்துள்ள போதைப்பொருள் நெருக்கடிக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்குமாறும் கோரியே மகஜரை கையளித்துள்ளார்..

## "சுருங்கிய பொருளாதாரமே நாட்டில் காணப்படுகிறது"



2033ஆம் ஆண்டிலிருந்து எமது நாட்டின் கடனை அடைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருந்த நிலையில், கடந்த அரசாங்கமும் முன்னைய ஜனாதிபதியும் அதனை நிராகரித்ததோடு 2028ஆம் ஆண்டிலிருந்து கடனை செலுத்தும் இணக்கப்பாட்டை எட்டியது. எனவே, 2028 முதல் கடனை செலுத்துவதற்கு போதுமான கையிருப்புக்களை நாடு கொண்டிருக்க வேண்டும். கையிருப்பு தானாகச் சேராது. இதற்கு ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை வலுப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கம்பஹா, கிரிதிவெல பிரதேசத்தில் அமைந்துள்ள ஹர்ஷன ராஜகருணாவின் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை(13) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## பாழடைந்த அரச வாகனம் மீட்பு

■ டி,சந்ரு,செ.திவாகரன்



முன்னாள் போக்குவரத்து அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்று பாழடைந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை பொலிஸார் திங்கட்கிழமை (14) கண்டுபிடித்துள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலைய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மூவருக்கு சிறை

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சார்பில் சட்டத்தரணி தினேஷ் பெரேரா ஆஜரானார். பிரதிவாதிகள் சார்பில் சானக்கயா லியனகே ஆஜரானார்.

இந்நிலையில், டப்ளியு.எம். மெண்டிஸ் மற்றும் கம்பெனி லிமிடெட்டின் மூன்று பணிப்பாளர்களைப் பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை (14) மாலை மறுத்துள்ளது.

தமக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதித்த உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகள் கொழும்பு மேல் நீதிமன்றில், நீதவான் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் ஊடாக மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

குற்றம் நிரூபிக்கப்பட்டதன் பின்னர், மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்யும் போது, பிரதிவாதிகள் பிணையைக் கோருவதற்கு உரிமையுண்டு, அதன் மூலம் அவர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் பிணை கோரியுள்ளனர். எனினும், பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் மறுத்துள்ளது.

## ஜீப்பால் மோதி சிறுவனை கொன்ற கோடீஸ்வரனின் சிறிய மகன்

முன்பாக பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியை, அந்த ஜீப் பின்னால் மோதியுள்ளது. அந்த முச்சக்கரவண்டியில் பயணித்த மூன்றரை வயதான சிறுவன், கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில், கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

வெளிநாட்டில் இருந்து கம்பளை இல்லவத்துரு பிரதேசத்துக்கு வந்திருந்த மொஹமட் சிராஸ் அம்டே என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

முச்சக்கரவண்டியின் பின்னால் மோதியதன் பின்னர் அந்த ஜீப் வண்டி, அவ்விடத்தில் நிறுத்தாமல், சுமார் 55 மீற்றர் முன்னால் சென்று, கம்பளை தனியார் பஸ் நிறுத்துமிடத்துக்குள் சென்று திரும்பும் போது, அங்கு பழங்கள் விற்றுக்கொண்டிருந்தவர் மீதும் அவருக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மற்றுமொரு முச்சக்கரவண்டியின் மீதும் மோதி நின்றுள்ளது. இந்த சம்பவங்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## “சுருங்கிய பொருளாதாரமே நாட்டில் காணப்படுகிறது”

மேலும், நமது நாட்டில் சுருங்கிய பொருளாதாரமே காணப்படுகிறது. இந்த பொருளாதாரம் விரிவடையும் போது நாட்டுக்குப் பணமும் அந்நிய செலாவணியும் கிடைக்கும். இது கடனை அடைப்பதற்கான செயல்முறையைத் தொடக்கி வைக்கும். இதனை அடைவதற்குச் சரியான தொலைநோக்குப் பார்வையும் சிறந்த குழுவையும் யார் கொண்டிருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழிற்சாலைகளை ஆரம்பித்து அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் கிட்டத்தட்ட 260,000 மூடியுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினரை யாரால் வலுப்படுத்த முடியும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நாட்டை வழிநடத்தும் பொருளாதார பார்வையைக் கொண்டுள்ள தரப்பு யாருக்கு உள்ளது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். 2028 கடனைத் திருப்பிச் செலுத்தும் செயல்முறையின் போது, கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய, பொருளாதாரத்தை நடைமுறையில் யாரால் உருவாக்க முடியும் என்பதை மக்கள் ஆழமாகச் சிந்தித்தறிய வேண்டும். இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஐக்கிய மக்கள் சக்தியே சிறந்த தீர்வு. இதற்குத் தேவையான திறமையான அணி தன்னிடம் உள்ளது.

2028ஆம் ஆண்டிலிருந்து கடனை அடைத்து வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடக்கூடிய நாட்டை பிரயோக ரீதியாக ஐக்கிய மக்கள் சக்தியாலும் ஐக்கிய மக்கள் கூட்டணியாலுமே உருவாக்க முடியும். நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். வறுமை, வேலையில்லா திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காண வேண்டும். நாடு குறித்து சிந்தித்து நாட்டிற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டும்.

இன்று காணப்படும் நிலையில் இருந்து நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் தற்போதைய ஜனாதிபதியுடன் தொடர வேண்டும். அற்ப வாதங்களை, அரசியல் கருத்துக்களையும் விட்டுவிட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் பக்க பலத்தைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்திற்குச் செல்ல வேண்டும். இதற்கான முயற்சியை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கத் தயாராக உள்ளது.

அத்துடன், வருமான மூலங்களை வலுப்படுத்தி, புதிய தொழில்களை ஆரம்பிக்கத் தேவையான கொள்கையை உருவாக்கி அதற்கான சூழலை ஐக்கிய மக்கள் சக்தியாலயே உருவாக்க முடியும் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## “சுயநலன்களுக்காக தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்” டக்ளஸ் தேவானந்தா ஆதங்கம்

சுயநலன்களுக்காக தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்று தெரிவித்துள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, நடைமுறைச்சாத்தியமான அரசியலை ஈ.பி.டி.பி. கட்சி மாத்திரமே இணக்க அரசியல் ஊடாக முன்னடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வட்டார உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் முல்லைத்தீவு கட்சி அலுலவகத்தில் திங்கட்கிழமை (14) இடம்பெற்ற சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஈ.பி.டி பி. தவிர்ந்த தமிழ்த் தரப்புக்கள் சுயநலன்களுக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளையும் பிரச்சினைகளையும் கையாள்வதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், “ தேர்ததல் வெற்றிகளுக்காக கூட்டுச் சேருகின்ற கட்சிகள், தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தி கூட்டணிகளை அமைப்பதாக தெரிவிக்கின்றனர்.

அண்மையில், ஒரு கட்சி கூறியுள்ளது கொலை, கொள்ளை, கடத்தல் போன்றவற்றில் ஈடுபட்ட கட்சிகளைத் தாங்கள் இணைத்து வைத்திருந்ததாகவும் தற்போது வெளியேற்றி விட்டதாகவும் கூறுகிறார்கள்.

இவர்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் கூட்டமைப்புக்கள் அமைக்கப்பட முற்பட்ட காலத்திற்குரியவை, இணைந்து இருக்கின்றபோது இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக தெரியாமலா இருந்தீர்கள் என்று சம்மந்தப்பட்டவர்களிடம் கேட்க விரும்புகின்றேன்.




அதேபோன்று இன்னொரு தரப்பு சொல்கிறது ஒற்றையாட்சியை ஏற்கமாட்டார்களாம், மாகாணசபையை ஏற்கமாட்டார்களாம். ஆனால், மாகாணசபை தேர்தல் நடைபெற்றால் போட்டியிடுவார்களாம். இவ்வாறானவர்களிடம் உண்மை இல்லை. மக்களை ஏமாற்றுகின்றார்கள்.

ஈ.பி.டி.பி. மாத்திரமே 90 ஆம் ஆண்டிலிருந்து வெளிப்படையாக மக்களுக்கு சாத்தியமான வழியை வெளிப்படையாக கூறிவருகின்றது. இணக்க அரசியல் ஊடாக எமது வழிமுறையில் கணிசமான விடயங்களை செய்திருக்கின்றோம்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலிலும் மக்கள் கணிசமான வாக்குகளை

வழங்கி 4 அல்லது 5 ஆசனங்களை தரும்பட்சத்தில், குறித்த மக்கள் ஆணையை பயன்படுத்தி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவோம்" என்று தெரிவித்தார்.

## பொதுத் தேர்தலில் புத்திசாதூரியம் வேண்டும்

ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் திங்கட்கிழமை (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலகில் பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்த நாடுகள் பயணித்த பாதையில் இலங்கையும் செல்வதற்குத் தேவையான வேலைத்திட்டம், தொலைநோக்கு மற்றும் சிறந்த அணி எது என்பதை மக்கள் கவனமாகச் சிந்திக்க வேண்டும். இந்த நாட்டில் அரசியல் புரிந்துணர்வுடன் செயற்படும் ஜனாதிபதியும் அரசாங்கமும் உருவாக்கப்பட வேண்டும். நாட்டு மக்கள் உணர்ச்சிகளால் அல்லாது, புத்திசாலித்தனத்தால் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடையில் தெரிவித்திருந்தார். பாராளுமன்றத் தேர்தலில் தகுந்த வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என்றும் அவர் அங்கு கூறியிருந்தார். தற்போது வலுவான ஆட்சி அமைக்க மக்களின் ஆதரவை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இவ்வாறான நிலையில், நாட்டு மக்கள் உணர்வுவசப்பட்டு செயற்படாமல் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும்.

நமது நாட்டு வரலாற்றில் கூடிய அதிகாரம் மேலாதிக்கப் போக்குகளை உருவாக்கியுள்ளது. கூடிய அதிகாரம் ஊழலுக்கு வழிவகுத்துள்ளது. உலகில், ஜனாதிபதி ஒரு கட்சியையும், பிரதிநிதிகள் சபை மற்றொரு கட்சியையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். பிரான்சின் ஜனாதிபதி ஒரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியே பெரும்பான்மை பலத்தைக் கைப்பற்றியது. அமெரிக்காவில் ஜனாதிபதி ஒரு கட்சியையும், பிரதிநிதிகள் சபை மற்றொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்ப டுத்துகின்றனர். அந்த நாடுகளின் ஆட்சியில் சமநிலையையும் சமநிலையையும் காண முடிகிறது. இந்நாடுகளில் காணப்படும் ஆட்சியில் அதிகாரங்களுக்கிடையிலான தடைகள் மற்றும் சமன்பாடுகளைக் காணமுடிகிறது.

இந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைக் கொண்ட அரசாங்கத்தைத் தெரிவு செய்வது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லது என நம்புகிறோம். இது நாட்டின் ஜனநாயகத்திற்கும் முக்கியமான விடயமாகும். இத்தகைய முடிவினால் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படாது. சட்டத்தின் ஆட்சி செயல்படுவதற்கும் இது ஒரு காரணமாக அமையும். ஐக்கிய மக்கள் சக்தி சமூக ஜனநாயக நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி முற்போக்கான கட்சியாகும். மேலும், இன்று உலகம் தீவிர சோசலிஸ போக்கை நிராகரித்துள்ளது. தீவிர வலதுசாரி போக்கையும் இன்று உலகம் நிராகரித்துள்ளது. தீவிர இடதுசாரி, தீவிர வலதுசாரி போக்குகளை நிராகரித்த நாடுகள்தான் இன்று பொருளாதார ரீதியாக வலுவான நாடுகளாகக் காணப்படுகின்றன. சீனா, வியட்நாம் உள்ளிட்ட இன்னும் பல நாடுகள் சாத்தியமான பாதையில் பயணிப்பதால் தான் அந்த நாடுகள் இன்று பொருளாதார ரீதியாக வலுப்பெற்றுள்ளன என்றார்.

## “மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு”

நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பது குறித்தும் இந்த சந்திப்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளில் கிராமப்புற பெண்களின் பங்களிப்பை மட்டுப்படுத்தியிருப்பது நிதித் துறையில் குறிப்பிடத்தக்க சவால்களுக்கு வழிவகுத்துள்ளது என்று ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் சுட்டிக்காட்டியது. மேலும், தேசியப் பொருளாதாரத்தில் விவசாயத் துறை குறைந்த பிரதிநிதித்துவத்தைக் காட்டுவதும் இதற்கு காரணமாகிறது.

ஆசிய வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் விவசாய உற்பத்தித் திறன் மோசமான நிலையில் காணப்படுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரும்பாலான விவசாயிகள் சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்டுள்ளதாகவும் பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை தமது பிரதான வருமான வழியாக கருதவில்லை எனவும் ஜனாதிபதி எடுத்துக்காட்டினார் . இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, பேரம் பேசும் சக்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த உதவியாக உள்ள விவசாயச் சங்கங்களை வலுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடைய செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவை வழங்க விருப்பம் தெரிவித்த உதவிச் செயலாளர் நாயகம், ஊழலைக் குறைப்பதில் முக்கிய கருவியாக டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து இன மற்றும் மத சமூகங்களையும் உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான சீர்திருத்தங்கள் அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

நுண்கடன் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், அத்துறையின் வட்டி விகிதங்கள் நியாயமாக இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதிக பெண்களை உள்வாங்குவதன் மூலம் நுண் நிதித் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், மூலதனத்தைப் பாதுகாப்பதற்காகப் பெண் தொழில் முயற்சியாளர்கள் முன்வைக்கும் சிறந்த முன்மொழிவுகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

புதிய அரசாங்க சீர்திருத்தங்கள், ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் பொருளாதாரம் மற்றும் பாராளுமன்றம் இரண்டிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உறுதிப்பாடு இந்த சந்திப்பின் போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா, மூலோபாய ஈடுபாடு, டிஜிட்டல் மற்றும் புத்தாக்கக் குழுவின் தலைவர் பாதில் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மலையகத்தை ‘தாயக்கட்டை’ காக்கும்

அத்துமீறி கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு எதிராக வழக்கு தொடரத் தேவையில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் கம்பனிகளுக்கு சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. எனினும், தோட்டத் தொழிலாளர்கள் தமது உழைப்பின் மூலம் கட்டியுள்ள குடியிருப்புகள் பல உடைக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக மலையகப் பிரதிநிதிகள் எவரும் பாராளுமன்றத்தில் எவரும் குரல் கொடுக்கவில்லை. நாம் பாராளுமன்றம் செல்லும் போது இது தொடர்பாகவும், காணி வீடுகள் சம்பந்தமாகவும் வலியுறுத்துவோம் என்றார்.

**“ மலையகத்தில் அடிக்கடி கட்சி தாவுகின்றவர்கள் வெற்றி பெற முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எமது கொள்கைகளை ஆதரித்து மலையகத்தில் மட்டுமல்லாது, வெளியிலிருந்தும் ஆதரவு கிடைத்து வருகின்றது**

பெருந்தோட்டங்களில், சட்டத்துக்கு முரணாக 30 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் அவற்றை அகற்றுவதற்காக 2000 க்கும் அதிகமான கோப்புகள் தயார் நிலையில் உள்ளதாகவும் தகவல் அறியும் சட்ட மூலத்தின் ஊடாக தெரிய வந்துள்ளது. 1989 ஆம் ஆண்டுக்குப் பின்னரே இவ்வாறு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட மக்கள் அரசியல்வாதிகளால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். அண்மையில் நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாய் கிடைத்தது தமக்குக் கிடைத்த வெற்றி என்று பிரசாரம் செய்தார்கள். இவ்வாறு வழங்க முடியும் என்று கம்பனிகள் சார்பில் ரொஷான் இராஜதுரை தான் கூறியிருந்தார். இதற்கு யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. அத்தோடு சம்பள நிர்ணய சபையின் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்க 14 நாட்கள் அவகாசம் தரப்பட்டிருந்தது. அதற்குப் பிறகுதான் கருத்து கூற முடியும். ஆனால், கைச்சாத்திட்ட தினத்திலேயே சம்பளம் கிடைத்து விட்டதாக வெற்றி விழா கொண்டாடினார்கள். இத்தகைய பொய், புரட்டுகளை அம்பலப்படுத்தி எமது மக்களுக்குத் தெளிவூட்டுவதே எமது நோக்கமாகும்.

மலையகத்தில் அடிக்கடி கட்சி தாவுகின்றவர்கள் வெற்றி பெற முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எமது கொள்கைகளை ஆதரித்து மலையகத்தில் மட்டுமல்லாது, வெளியிலிருந்தும் ஆதரவு கிடைத்து வருகின்றது. இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு பெண்கள் உட்பட ஐந்து சட்டத்தரணிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் எமது சுயேச்சைக் குழுவின் ‘தாயக்கட்டை’ சின்னத்தில் போட்டியிடுகின்றார்கள் என்றார்.

## பாழடைந்த அரச வாகனம் மீட்பு

இந்த வாகனம், நுவரெலியா- பதுளை பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சொந்தமான கட்டடத்திற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் பல வருடங்களாக ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது முன் பக்க இலக்கத் தகடு இன்றியும் பின் பகுதியில் மாத்திரம் இலக்கத் தகடு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜீப் வாகனமும் மற்றுமொரு ஜீப் வாகனமும் நுவரெலியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட தொடர்பு அதிகாரியின் பாவனைக்காக அமைச்சரினால் வழங்கப்பட்டதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# “திசைக்காட்டி மறுத்ததால் மைக்கை பிடித்தேன்”

ஆ.ரமேஸ்

தேசிய மக்கள் சக்தியில் ஆசனம் கிடைக்காததால் ஐக்கிய மக்கள் குரல் சார்பில் ரஞ்சன் ராமநாயக்கவின் கட்சியில் அவருடன் இணைந்து நுவரெலியா மாவட்டத்தில் பொதுத் தேர்தல் களம் இறங்கியுள்ளேன் என மலையக மக்கள் முன்னணி ஸ்தாபகர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் புதல்வி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

நுவரெலியாவில், திங்கட்கிழமை (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, மலையக மக்களுக்கான குரலாக, நுவரெலியா மாவட்டத்தில் ஒலிவாங்கி சின்னத்தில் போட்டியிடுவதாகத் தெரிவித்த தலைமை வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன் நுவரெலியாவில் எமது குரல் ஒலிக்கும் அதே நேரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ஆசனங்களை வென்றெடுப்பதற்கான நடவடிக்கையில் நாம் களம் இறங்கியுள்ளதில் எவ்வித ஐயமும் இல்லை.

எம்மை பொறுத்தவரையில், பகிரங்க அரசியல் வேறு, எனது கடந்த கால அரசியல் வேறு, எல்லா விடயத்தையும் நாங்கள் பகிரங்கமாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை. சில இடங்களில் சில நேரங்களில் அரசியலில் மௌனம் காக்க வேண்டும். ஆகவே இவ்வளவு நாள் என்னுடைய சேவைகளிலும், அரசியல் செயற்பாட்டிலும் நான் பகிரங்கமாக இருக்கவில்லை என்றார்.

“தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தாக தெரிவித்தார்கள். நீங்கள் ஏன்? அதில் போட்டியிடவில்லை” என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கிய அவர், தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட நான் அவர்களிடம் ஆசனம் ஒன்று கேட்டிருந்தேன். அவர்கள், ஆசனம் தருவதாகக் கூறி இருந்தார்கள் அதற்கான பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டது. எனினும், தங்களுடைய கட்சியில் நீண்ட காலமாக இருந்தவர்களுக்கு ஆசனம் வழங்குவதாகவும் கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு மேலாக அக்கட்சியில் இருந்தவர்கள் அல்லது அக்கட்சிக்கு உழைத்தவர்களுக்கு ஆசனம் வழங்குவதாகவும் ஆகையால் எனக்கு ஆசனம் இல்லை எனவும் தெரிவித்தனர்.




ஆனால், நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் விதத்தில் தான் நாங்கள் தற்போது ரஞ்சன் ராமநாயக்கவுடன் இணைந்து ஐக்கிய மக்கள் குரல் கட்சியில் செயல்படத் தொடங்கினோம். காரணம் அரசாங்கம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆகையால் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட நாம் இவ்வாறு களம் இறங்கி உள்ளோம் என்றும் கூறியுள்ளார்.

## கல்முனை கார்மேல் பற்றிமாவின் 125ஆவது ஆண்டு விழா

கிழக்கில் புகழ்பெற்ற கல்முனை, கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் 125ஆவது ஆண்டு (Jubilee) விழாவின் அங்குரார்ப்பண விழா, பாடசாலை முதல்வர் அருட் சகோதரர்.எஸ்.ஈ.ரெஜினோல்ட் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (13) கோலாகலமாக இடம்பெற்றது.

கல்முனை, கார்மேல் பற்றிமாக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவானது, 2024 ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 2025ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 வரை கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

– வி.ரி.சகாதேவராஜா














## பிரதான நுழைவாயில் திறந்துவைப்பு

யாழ். பல்கலைக்கழகத்தின் பொன் விழா ஆண்டை முன்னிட்டு, புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிரதான நுழைவாயில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.






## குடிசன தொகை மதிப்பீடு

ஏ.எச்.ஹஸ்பர்

2024ஆம் ஆண்டுக்கான குடிசன தொகை மதிப்பீடானது திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி தலைமையில் திங்கட்கிழமை(14) அன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தம்பலகமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் குறித்த குடிசன தொகை மதிப்பீடு இடம் பெற்றதுடன்

இது இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற 15ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட வெளிக்கள உத்தியோகத்தர்கள், குடிசன மதிப்பீட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஜீப் கவிழ்ந்ததில் ஐவர் காயம்

நவி

புப்புரஸ்ஸ பொலிஸ் நிலையத்திற்கு அருகில், புப்புரஸ்ஸ - கலஹா பிரதான வீதியில் ஜீப் வண்டியொன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று சிறுவர்கள் உட்பட இருவருக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயடைந்தவர்களை அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு புப்புரஸ்ஸ- பன்வில பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு



மாற்றப்பட்டுள்ளனர்.

புப்புரஸ்ஸ பகுதியில் இருந்து கம்பளை நோக்கி பயணிக்கும் போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பிலான விசாரணையின் போது, சாரதி மது அருந்திய நிலையில் வாகனத்தை செலுத்தியதால் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## “ஜனாதிபதி ஆதரவு வழங்க தயார் ”

எஸ்.சதீஸ்

மலையக மக்களுக்கு பமலையக மக்களுக்கு பத்து பேர்ச் காணி வழங்க நாட்டின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் அவருக்குத் தாம் ஆதரவினை வழங்கத் தயாராக உள்ளதாகத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவ- கெர்கஸ்வோல்ட் தோட்டப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(13) ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வறுமை நிலையில் இருந்து வந்த ஒரு நபர் மலையக மக்களுக்கு வீட்டுரிமை மலையக இளைஞர் யுவதிகள் அதிகமாக கொழும்பு பகுதியில் உள்ள வீடுகளிலும் உணவகங்களிலும் தொழிலுக்கு அமர்த்தப்பட்டதாக எதிர்க்கட்சியில் இருந்த காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் அதிகமாகக் குரல் கொடுத்தார். தற்போது அவர் சகல அதிகாரங்களையும் கொண்ட ஒரு ஜனாதிபதி.

பொதுத் தேர்தல் என்பது மலையக மக்களுக்கு முக்கியமான ஒரு தேர்தலாகும் ஏனெனில் மலையக பிரதிநிதிகளை இல்லாமல் செய்வதற்கான சூழ்ச்சி



இடம்பெற்று வருகிறது. மலையகத்தில் புதிய மாற்றம் வேண்டும் என சுயேச்சையாகச் சிலர் போட்டியிடுகின்றனர். மலையக மக்களுக்கு எவ்வித அபிவிருத்திகளும் முன்னெடுக்கவில்லை என சிலர் கூறுகின்றனர்.

2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை மலையகத்தில் மாற்றத்தை மேற்கொண்டு ஏழு பேர்ச் காணியில் வீடமைப்பு திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். தோட்டப் புறங்களில் உள்ள வீதிகளை காபட் வீதியாக மாற்றியது சிறுவர் நிலையங்களை அபிவிருத்தி செய்தது அனைத்தும் எமது அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

மலையத்தின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் குறைவடைந்தால் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு உரிமைகளுக்குக் குரல் எழுப்ப முடியாது, மலையக மக்களின் சம்பள பிரச்சினை முதல் அனைத்து அடிப்படை பிரச்சினைகளுக்குப் போராடக் கூடிய ஒரு கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணி மாத்திரம் உள்ளது என்றார்.



## மதுபானசாலைக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம் - தையிட்டி பகுதியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து திங்கட்கிழமை (14) அன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு முன்பாக வலி வடக்கு சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவகெங்கா சுதீஸ்னரிடம் மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.





## கம்பஹா பிரதேச சபை

### விலைமனுக்கள் கோரப்படுகின்றன

**மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு முழுமையான காப்புறுதி செய்தல்.**

**கொள்முதல் இலக்கம் DS /07/2024**

01.கம்பஹா பிரதேச சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கு 2024.11.27 ஆம் திகதி முதல் 2025.11.26 ஆம் திகதி வரை ஒரு வருடத்திற்கு பின்வரும் காப்பீடுகளுடன் முழு காப்புறுதியை மேற்கொள்வதற்கு சீல் செய்யப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பெறப்பட வேண்டிய காப்புறுதி

- கலகங்கள் - வன்முறை காப்புறுதி
- விபத்துக்கள் காப்புறுதி
- தீ காப்புறுதி
- இயற்கை பேரழிவுகள்
- திருட்டுக்கான காப்புறுதி
- மூன்றாம் தரப்பு உதவித்தொகை குறைந்தபட்சம் ரூ.02 லட்சமாக இருக்க வேண்டும்.
- வாகனத்தில் பயணிக்கும் ஒருவருக்கு தனிநபர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை குறைந்தபட்சம் 50,000.00 ரூபாயாக இருக்க வேண்டும்.
- பணியாளர்களின் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை (ஓட்டுனர்களுக்கு)
- பயங்கரவாத காப்புறுதி

02. தேசிய போட்டி ஏல முறையின்படி விலைமனுக்கள் அழைக்கப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் 2024.10.15 ஆம் திகதி முதல் அரச அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை கம்பஹா பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவிற்குச் சென்று ஏலங்கள் தொடர்பாக பரிசீலிக்கலாம் மேலும் இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பணி மேற்பார்வையாளரிடம் (033-2220145) பெற்றுக்கொள்ளலாம்.

04. 2024.10.14 ஆம் திகதி முதல் 2024.11.05 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை திரும்பப்பெற முடியாத கட்டணமாக ரூ.1000.00 (ஆயிரம் ரூபாய்) செலுத்தி எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து விலைமனு விண்ணப்பங்களை அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

05. ஏலப் காப்பீட்டுத் தொகையாக ரூ.5,000.00 (ரூபாய் ஐயாயிரம்) கம்பஹா பிரதேச சபையில் வைப்பிலிடப்பட்டு, சீல் செய்யப்பட்ட விலைமனு விண்ணப்பத்துடன் பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்க வேண்டும்.

06. அசல் மற்றும் நகலாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள், 2024.11.06 ஆம் திகதி அன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக, “பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கோட.” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது கம்பஹா பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடப்பட வேண்டும். கொள்முதல் இலக்கம். கொள்முதலின் பெயர் மற்றும் அசல் அல்லது நகலாக கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக பெறப்பட்ட விலை மதிப்பீடுகள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பெறப்படும் நேரம் முடிந்தவுடன் கம்பஹா பிரதேச சபை கேட்போர் கூடத்தில் ஏலதாரர்கள் ஃ பிரதிநிதிகள் முன்னிலையில் ஏலம் திறக்கப்படும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**எஸ். ஏ. என். பி. சுரவீர**
**பிரதேச சபை செயலாளர்**
**கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், கடமைகள் அமலாக்க அதிகாரி**
**கம்பஹா பிரதேச சபை,**
**மிரிஸ்வத்த, முதுன்கோட.**

**2024.10.07**

**தொ. இல: 033 2220145**
**தொலை நகல்: 033 2220144**

# புதிய அரசியல் கலாசாரமே பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது

இலங்கை அரசியல் இயக்கத்தில், மாற்று அரசியல் போக்குடன், பாரம்பரிய அரசியல் அமைப்பு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முறியடிக்கப்பட்டதுடன், பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு, வேட்பு மனுக்களும், ஒக்டோபர் 11ஆம் திகதியன்று ஏற்கப்பட்டன. நவம்பர் 14ஆம் திகதியன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தல் போரிலிருந்து மட்டுமின்றி அரசியலில் இருந்தும் ஓய்வு பெறப் போவதாக பலம் வாய்ந்த மற்றும் நன்கு அறியப்பட்டவர்கள் அறிவித்துள்ளனர் அவர்களில் மூன்று முன்னாள் ஜனாதிபதிகள் உள்ளனர். மேலும், இந்த ஆண்டு பொதுத் தேர்தலைக் கேட்காமல் வீட்டிலேயே இருப்போம் என்று பல சக்திவாய்ந்த பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு மத்தியில் கடந்த பாராளுமன்றத்தையே அதிரவைக்கும் வகையில் பேசிய “பேச்சாளர்கள்” உள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு அதிகார பீடத்தையும் பலப்படுத்தச் சென்று “நன்றாகக் குளித்து” தோல்வியடைந்து சிக்கலில் மாட்டிக் கொண்ட ஒரு கும்பலும் வீட்டுக்குச் செல்வதாகத் தெரிகிறது. மேலும், சில கட்சிகளின் வேட்புமனுக்களை எதிர்பார்த்து சில கட்சிகள் மேடையேறுவதும், வேறு சில கட்சிகள் வேட்பு மனுக்களைப் பெறாமல் வேறு கட்சிகளுக்கு மாறுவதும் இன்றைய நாட்களில் காணப்படுகின்றது.

எனவே, பொதுத் தேர்தல் மட்டுமன்றி, தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றமும் நாட்டின் அரசியல் வரலாற்றைக் கணிசமாக மாற்றும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எது எப்படியாயினும், வேட்புமனுத் தாக்கல் காலத்தை விட, இனிமேல் தேர்தல் பிரசாரக் காலம் முக்கியமான காலமாக அமையும். ஏனென்றால் இந்தக் காலகட்டத்தில் அரசியல் சூடு தானாக எழுகிறது. பொதுவாக, ஜனாதிபதித் தேர்தலை விட பாராளுமன்றத் தேர்தலின் சூடு அதிகமாக இருக்கும், ஏனென்றால் ஒரே பிரச்சாரக் களத்தில் குறைந்தது 200 வேட்பாளர்கள் தேர்தல் போரில் ஈடுபடுகிறார்கள்.

ஒருபுறம், ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது, அதிக தேர்தல் வன்முறைகள் பதிவாகும் போக்கு உள்ளது. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் காலத்தைப் போன்று இந்தத் தேர்தலையும் அமைதியான, வன்முறையற்ற தேர்தலாக மாற்றுவதற்குக் குறிப்பாக வேட்பாளர்களும் அந்தந்த கட்சிகளும் குழுக்களும் தங்களது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

நாட்டில் இவ்வாறானதோர் அரசியல் கலாசாரம் தோன்றியமை நாட்டின் தரப்பிலிருந்தோ அல்லது மக்களிடமிருந்தோ நாட்டிற்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும். இன்னும் பழங்குடி மனப்பான்மையுடன் ஒருவரையொருவர் கொன்று குவிக்கும் கட்சி அரசியல் அமைப்பிற்குப் பதிலாக, ஒருவரையொருவர் மதிக்கும், மக்களுக்குப் பொறுப்புக்கூறும், மக்களை மகிழ்விக்கும் அரசியல் கலாசாரம் நாட்டுக்குத் தேவைப்படும் காலம் வந்து விட்டது.

இந்தத் தேர்தலில் புதிய அரசியல் பிரச்சாரக் கலாசாரத்தை நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கிறோம். எனவே இவ்வருடமும் அமைதியான தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் பாடுபடுவதுடன் நாட்டில் நல்லதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்க நல்ல வேட்பாளர்களை மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து எதிர்வரும் பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு வாக்காளர்களும் பங்களிக்க வேண்டும்.

தமிழ்Mirrorக்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

ஒருவர் தனது சுயநலத்துக்காக ஒருவரிடம் உதவி கேட்பதற்காக அவரை அணுகிக் கண்டபடி புகழ்ந்தால், அதைக் கேட்ட நபர், அதை உண்மை என நம்பினால், அவர் தனது உண்மை நிலையை உணராதவராகின்றார்.

பொய்களை நம்பினால், கேட்பவர் திறமை மங்கிவிடும். பத்து பேர் போலியான விடயங்களைச் சொன்னால், அதை நம்புபவர்கள் அப்பாவிகளாகவும் உலகம் தெரியாதவர்களாகவும் இருப்பார்கள்.

கெட்டிக்காரர்களையும் முட்டாள்களாக்கச் சிலர் பொய் புளுகுகளைப் பிரயோகிப்பதுண்டு. இத்தகைய பாவச் செயல் அவர்களை திரும்பத் தாக்கும்.

ஏமாற்றி வாழும் கூட்டம் இருக்கின்றது. அடிக்கடி தவறு செய்வது, கடவுளை ஏமாற்ற எண்ணுவதாகும். தவறுகளைத் தொடர்ந்து செய்பவர்கள் நிம்மதியாக வாழமுடியாது.

காலம் சும்மா சுழல்வதில்லை. நல்ல மனிதர்களுக்கு நமைகளையும் தகாத செயலைச் செய்பவர்களுக்கு தகுந்த தண்டனைகளையும் வழங்கி வருகின்றது. மரணத்திலும் வாழ்பவர்கள் ஒழுக்க சீலர்களே.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# முஸ்லிம்கள் முன்னுள்ள இரு விதமான சவால்கள்

மொஹமட் பாதுஷா

நாட்டின் அரசியல் கலாசாரத்திலும், அதற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதிலும் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் முன்னரை விட அதிகமாக அனைத்து மக்களுக்கும் இப்போது ஏற்பட்டிருக்கின்றமை வெளிப்படையானது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மற்றும் முன்னாள் எம்.பிக்களின் கடந்தகால செயற்பாடுகளால் முஸ்லிம் மக்கள் வெறுத்துப் போயுள்ளர். சமூகத்திற்கு உதவாத இந்த அரசியல் ஒழுங்கை மறுசீரமைக்க வேண்டும் என்ற எண்ணத்திற்குள் முஸ்லிம்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இதனைச் சற்று புரிந்து கொண்ட முஸ்லிம் கட்சிகளும், பெருந்தேசியக் கட்சிகளும் முஸ்லிம் பிரதேசங்களில் வழக்கமான அரசியல்வாதிகளையே மீண்டும் வேட்பாளராகப் போடுவது குறித்து மீள் பரிசீலனை செய்திருக்கின்றன.

சில இடங்களில் (எச்.எம்.எம்.ஹரீஸ் போன்ற) சில அரசியல்வாதிகளுக்கு ‘வெட்டு விழுந்திருக்கின்றது. சில இடங்களில் கொஞ்சம் புதுமுகங்கள் களமிறக்கப்பட்டு இருக்கின்றன

ஆனால், முஸ்லிம் கட்சிகளின் ஊடாக நேரடியாகவோ அல்லது ஏனைய கட்சிகளின் ஊடாகவோ களமிறக்கப்பட்டிருக்கின்ற எல்லா முஸ்லிம் வேட்பாளர்களும் சமூகத்திற்குப் பொருத்தமானவர்கள் என்று சான்று பகர முடியாது.

எந்த அரசியலை மாற்ற வேண்டும் என்று மக்கள் நினைக்கின்றார்களோ அதே குட்டையில் ஊறிய பல அரசியல்வாதிகள் இம்முறையும் வேட்பாளர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர். இதற்கு சில நியாயங்கள் இருக்கலாம்.

முஸ்லிம் பிரதேசங்களில் யாரை வேட்பாளராகப் போடுவது என்ற இழுபறி நீடித்த நிலையில், சில முஸ்லிம் கட்சிகள் ஒரு சில மாவட்டங்களில் மிக மோசமான வேட்பாளர்களைக் கூட களமிறக்கியுள்ளன.

மக்கள் தொடர்பில்லாத, தவறான பின்புலத்தைக் கொண்ட, பிரதேச ரீதியாக மக்களிடம் நல்லபிப்பிராயம் இல்லாதவர்களை அல்லது செல்வாக்கற்ற புதுமுகங்களை வேட்பாளர்களாக உள்வாங்கியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படியான ஒரு சூழலில், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. அதேநேரம் முஸ்லிம்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பது பற்றிய வினாக்களும் தவிர்க்க முடியாத ஆசையாக இருக்கின்றன.

வடக்கு, கிழக்கிற்கு வெளியே உள்ள பிரதேசங்களில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் என்பது வேறுபட்டது. புல முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குச் சிங்கள மக்களும் வாக்களித்துத் தெரிவு செய்கின்றார்கள்.

சில பிரதேசங்களில் முஸ்லிம்கள், சிங்கள வேட்பாளர்களுக்கே வாக்களிக்க வேண்டிய நிலையும் உள்ளது.

வடக்கு, கிழக்கு கள நிலை வித்தியாசமானது. அந்த வகையில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இந்த பொதுத் தேர்தலில் சில ஊர்களில் இருந்து 5 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். ஒருவர் கூட போட்டியிடாத பிரதேசம் என்று எதுவும் இல்லை என்றே கூறலாம்.

இந்த விபரங்களை வைத்து நோக்கினால், முஸ்லிம் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும், இதுவரை எம்.பியாக இருந்தவர்களைப் போல் அல்லாது, சமூக சிந்தை மிக்கவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கருதினால், பலர் தோற்கடிக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இதனை முஸ்லிம் மக்கள் எந்தளவுக்குச் செய்வார்கள் எனத் தெரியாது. ஆனால், கணிசமான முஸ்லிம் வாக்காளர்கள் ஒரு மாற்றத்திற்காகச் சற்றுத் துணிச்சலான முடிவை எடுத்து பொருத்தமற்ற பழைய மற்றும் புதுமுக வேட்பாளர்களைத் தோற்கடித்தால், இத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் எம்.பிக்களின் எண்ணிக்கை குறைவடையும்.

இதேவேளை, இன்னுமொரு பிரச்சினையும் இருக்கின்றது. முஸ்லிம் பிரதேசங்களில் அதிக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளதால் வாக்குகள் மிகத் தெளிவாக பிரிவடையப் போகின்றன.

‘குரங்குகள் அப்பத்தைப் பிரித்துப் பங்குபோட்ட கதை’ போல, இந்த வாக்குகள் பிரிக்கப்படுவதால் யாருக்கும் பயனற்றுப் போவதற்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு, கிழக்கிலோ அதற்கு வெளியிலோ முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஒரு ஊரில் உள்ள அனைத்து மக்களும் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களித்தால் அவரை வெற்றிபெறச் செய்யக்கூடிய சாத்தியம் ஓரிரு ஊர்களுக்கு மாத்திரம்தான் உள்ளது. அந்த ஊரிலும் பல கட்சிகளில் பலர் போட்டியிடுகின்றனர்.

எனவே, இவ்விரு அடிப்படைகளிலும் பார்த்தால் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைவடைவதற்கே வாய்ப்புக்கள் அதிகமுள்ளதாகத் தெரிகின்றது. மாவட்டத்தில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெறும் கட்சிகளில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்கள் குறைந்த வாக்குகளோடு எம்.பியாகும் அதிர்ஷ்டத்தையும் பெறக் கூடும்.

முஸ்லிம் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்துக்கள் ஒருபுறமிருக்க, தமது சமூகத்தின் பிரதிநிதித்துவத்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற குரல்கள் வழக்கம்போல இப்போது மேலெழத் தொடங்கியுள்ளன.

இது அவசியமானது என்பதை எக்காரணம் கொண்டும் மறுக்க முடியாது. இரண்டாவது சிறுபான்மைச் சமூகம் தனது பலத்தைக் காட்டுவதற்காகவும், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் போதுமானளவு எம்.பிக்களை கொண்டிருப்பது முக்கியமானது.

இருப்பினும், எண்ணிக்கையை மட்டும் பாதுகாத்தால் அல்லது அதிகரித்தால் போதுமா? அந்த எம்.பிக்கள் சமூக நலனுக்காகச் செயற்படும் விடயத்தில் ‘தரமானவர்களாக’ இருக்க வேண்டிய அவசியமில்லையா என்ற தர்க்கவியல் வினாவுக்கு விடையென்ன?

கடந்த பல பாராளுமன்றங்களில் 15, 20 முஸ்லிம் எம்.பிக்கள் பதவி வகித்தனர். இது வெளிப்படையாக ஒரு பெரும் பலமாகப் பார்க்கப்பட்டது. இருப்பினும், இக்காலப் பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராகப் பல அநியாயங்கள் இழைக்கப்பட்டன. இனவாத நெருக்கடிகள், கருத்தியல் போர்கள் மூட்டிவிடப்பட்டன.

இந்தக் காலப்பகுதியில் இந்த இருபது பேரும் கூட்டுப் பலத்தை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகும்.

அநேக சந்தர்ப்பங்களில் பலர் ஆட்சியாளர்களுடன் உறவு கொண்டாடினர், சிலர் வாய்மூடி மௌனியாக இருந்தனர் என்பதுதான் உண்மையாகும்.

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத நெருக்கடிகள், கலவரங்கள் மற்றும் 20ஆவது திருத்தம் நிறைவேற்றம் தொடக்கம் ஜனாஸா எரிப்பு வரை பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம் எம்.பிக்கள் எவ்விதம் செயற்பட்டார்கள் என்பதை சமூகம் இன்னும் மறந்து விடவில்லை.

ஆகவே, முஸ்லிம் எம்.பிக்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது என்பது முக்கியம்தான். ஆனால், அவர்கள் தரமானவர்களாகவும் இருக்க வேண்டும். சமூகத்திற்காகச் சிந்தித்துச் செயற்படக் கூடிய நெஞ்சுரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

‘இருபது பேர் சும்மா இருப்பதை விட பத்து பேர் தரமானவர்களாக இருந்தாலும் பரவாயில்லை’ என்ற மக்கள் நினைப்பதற்குக் காரணம், கடந்தகால முஸ்லிம் எம்.பிக்களின், வாழாவிருந்து காலத்தைக் கடத்தும் ஏமாற்று அரசிலே அன்றி வேறொன்றுமில்லை.

ஆகவே, முஸ்லிம் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வந்து, தரமான எம்.பிக்களைத் தெரிவு செய்வதற்கு சமாந்திரமாக அச் சமூகத்தின் பாராளுமன்றபிரதிநிதித்துவமும் காப்பாற்றப்படுவது அவசியமாக இருந்தது.

ஆனால், அது பெருமளவுக்கு சாத்தியமற்றுப் போய்க் கொண்டிருக்கின்றது என்றே கூறலாம். முஸ்லிம் வேட்பாளர்கள் என்ற அடைமொழியோடு பழைய முகங்களும், புதுமுகங்கள் என்ற கோதாவில் கொஞ்சம்கூட பொருத்தமற்ற, மக்கள் செல்வாக்கற்றவர்களும் களமிறக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி முஸ்லிம் பிரதேசங்களில் அதிக எண்ணிக்கையான வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

அதாவது, முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் எண்ணிக்கை அடிப்படையில் காப்பாற்றி இந்த அரசியல் போக்கிலும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான திட்டம், வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் சரியாகத் தயாரிக்கப்படவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

ஆகவே, சுமார் 20 இற்கு குறையாத எம்.பிக்களை பெறுவதும் அவர்கள் முஸ்லிம் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கக் கூடியவர்களாக இருப்பதும் அவ்வளவு எளிதில் சமாந்திரமாக நடந்துவிடக் கூடிய இரு காரியங்களாகத் தெரியவில்லை.

இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் சாத்தியப்படும் என்று வருகின்ற போது, முஸ்லிம்களுக்கு ஒரேயொரு மாற்றுத் தீர்வு உள்ளது.

அதாவது, முஸ்லிம் சமூகம் தமது பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்துவது மட்டுமன்றி தெரிவாகும் எம்.பிக்களின் எண்ணிக்கையில் மட்டுமன்றி தரத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதன்படி, களமிறங்கியுள்ள வேட்பாளர்களை பழையவர்கள், புதியவர்கள் என்று பார்க்காமல், உண்மையில் யார் இந்த சமூகத்திற்குப் பொருத்தமானவர்கள் தரமானவர்கள் என ஆராய்ந்தறிந்து அவ்வாறானவர்களை அதிகமாகத் தெரிவு செய்வதன் ஊடாக, மேற்சொன்ன இரு இலக்குகளையும் ஓரளவுக்கேனும் அடையலாம்.

## கடிதங்கள்

### கழிவு நீரால் பயணிகள் அசௌகரியம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய பேருந்து நிலையத்தின் மலசலக் கூடத்தின் கழிவு நீர் வெளியேறி பயணிகள் பயன்படுத்தும் வெளி இடங்களில் நிற்பதனால் பயணிகள் கடும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பேருந்து நிலையம் கடந்த 28.03.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது. மலசலக் கூடம்,குளியலறை என பல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையம் ஐந்து மாதங்களில் முகம் சுழிக்குமளவுக்கு மாறிவிட்டது என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில பயணிகளின் பொறுப்பற்ற பயன்பாடு மற்றும் முறையான பராமரிப்பு இல்லாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலசலக் கூடத்தின் கழிவு நீர் பயணிகளின் பாதைகளிலும் அவர்கள் பயன்படுத்தும் இடங்களிலும் வெளியேறிக் காணப்படுவதனாலும், மலசலக் கூடங்கள் முறையான பராமரிப்பு இன்மையாலும் அவை சுகாதாரமற்ற முறையில் காணப்படுகிறது என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

– மு.தமிழ்ச்செல்வன்



# அலை மகள் ஓசையும் அடங்கியது



பெரியசாமி சுசாந்தனி,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அன்று தான் மலைகளைத் தாண்டிய சமதரைகளைக் கண்டேன். மலைகளின் இடையே சூரிய அழகை ரசித்த மலையக பிள்ளை நான். எனக்கு ஏதோ ஒரு வித புது அனுபவம் தான் சமவெளிப் பகுதியில் தொலைதூர சூரியனின் வருகை ... இரத்தச் சிவப்பில் முழுவதுமாய் அவன் எம்மோடு எங்கள் வேகங்களுக்குத் தொடர்ந்து வந்தான் இராப் பயணம் ஆரம்பித்து அந்த கதிரவனின் கதிரொளியோடு கண் சுருங்கி விழித்தேன் பயணமோ முடிவடைந்தது. முடிவடைந்தது என்னவோ வாகனப் பயணம் தான். இனி தான் ஆரம்பம் என் பயணப்படல்...

நான் அன்றிரவு நண்பர்களோடு இரத்தினபுரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றேன். நீண்ட நேரம் பயணம். முதன்முறை யாழ்ப்பாணம் என ஆர்வத்தோடு ஆரம்பித்த பயணம்... தூரங்கள் செல்ல களைப்பில் தூக்கமும் எம்மோடு வந்து பற்றிக் கொண்டது. தூக்கத்திலும் ஒரு ஆர்வம் யாழ்ப்பாணம் எவ்வாறு இருக்கும் என்று... விடியற்காலை 4.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக வந்த யாழ்ப்பாண தோழர்கள் உதவியில் இருப்பதற்கு இடமும் கிடைத்தது. காலையில் களைப்பில் பைகளையும் சுமந்து கொண்டு அறையில் வைத்து விட்டு உறங்கி சற்றே களைப்பாறி புத்துணர்வோடு பயணப்பட்டோம் யாழ். பல்கலை நோக்கி... ஒருவித பெருமிதம் பெற்றோர் ஆசை நிறைவேறியது என்று. ஒரு பக்கம் பயம்... மறுபக்கம் ஆசை படர்ந்து கொள்ள பல்கலைக்கழகத்தையும் சுற்றிப் பார்த்து புகைப்படங்களால் நினைவுகளைச் சேமித்தோம்.

பல்கலைக்கழகம் சுற்றிலும் பார்த்த நாங்கள் நனண்பியின் உறவினர் வீட்டிற்குச் செல்வோம் என கூற யாழின் அடையாளமாய் போன மினி பஸ்சில் ஏறியபோதே ஜன்னல் ஓர இருக்கை என்னை அழைத்தது. “முதல் கனவே... முதல் கனவே... மறுபடி ஏன் வந்தாய்...” என்னும் பாடலோடு வல்வெட்டிதுறை நோக்கிப் பயணித்தது மினி பஸ் ... அந்தப் பாடலோடு என் அதரங்களும் முணுமுணுத்தபடி பயணம் தொடர்ந்தது... சுமார் ஒரு மணித்தியால பயணத்திற்கு பின்னர் பேருந்தை விட்டு இறங்கி நேராக இருந்த புழுதி படிந்த அந்த மண்ணிலே நடந்து தெருவிற்கு தெரு கோவில்களையும் மதில் போட்ட வீடுகளையும் பார்ப்பதே வித்தியாசமான அனுபவமாகத் தான் இருந்தது.

நேர்பட இருந்த பாதையின் குறுக்கே ஓர் ஒழுங்கையும் இருந்தது. அதன் வழியே எங்களை அழைத்துச் சென்றார்கள் நண்பியும் அவளது அக்காவும். இரு பக்கமும் மதில் கட்டிய வீடுகளும். எதிரே நீல மயமான கடலும் அப்பப்பா... அந்த அழகை வர்ணிக்கவே முடியவில்லை. மாலை மங்கும் நேரத்தில் சூரியனின் அழகும் செவ்வானத்தின் வனப்பும் , வெள்ளை அலைகள் கரைத் தொட்டுப் போக நீலக் கடலும் கண்களுக்கு பெரும் விருந்தாயிருந்தன.

மெதுவாக நடந்த எங்களின் கால்கள் ஒரு நிமிடம் அந்த கால்களை விரைந்து செல்ல வைத்ததென்றே கூறலாம். உப்புக் காற்றும் அலைகளின் சத்தமும் ஏதோ ஒரு புதிய உணர்வுகளைத் தோன்றியது. அந்தக்கரையோர சூழல் நான் பார்த்திராத பல விடயங்களைப் பார்க்கச் செய்ததென்றே கூறலாம். கடலை பார்த்தவாறு,கோவிலின் அருகில் நாவிற்கு விருந்தாய் பஜ்ஜிகடை என ஏதோ திரைப்படத்தின் ஒரு காட்சிபோல் வந்து சென்றது.

கடலை பார்த்த ஆர்வத்தில் ஓடோடிச் சென்றோம். கரைகளின் ஓரத்தில் கொங்கிறீட்டுக்களாலான திட்டுக்கள் செய்யப்பட்டிருந்தன. அவற்றின் மேலே நின்று வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த வள்ளங்களும் அலைமகளின் அசைவில் மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருந்தது.

அந்தக் கொங்கிறீட்டுக்கள் மேலே நின்றவாறு வரிசையில் வளைந்த வள்ளங்களும் அசைந்து வரும் அலைகளின் அழகோடு மீனவ பெண்ணும், ஆணும் ஆளுக்கொரு மூலை வலையைப் பிடித்துக் கொண்டு அதில் சிக்கிக் கொண்டிருந்த கெண்டை மீன்களையும் கெளுத்தி மீன்களையும் உதறிக் கொண்டிருந்தனர். அதுவும் புது அனுபவமாகவே இருந்தது அதனையும் நின்று பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

கரையோரத்தில் அவ்வாறே அமைதியாய் நடந்து கொண்டே மெதுவாகக் கரைகளில் கால்களை நனைத்தேன். நானும் நண்பர்களும் உப்புக் கடலோரம் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தோம். ஆடிக்களைத்ததும் மெதுவாக நடந்து செல்ல நண்பி அவள் உறவினர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அங்கு கடற்கரையில் மென்மையான மணல் தரையைத் தொடும் ஓலைக்கூரைகள் என எளிமையான அழகான வீடாக இருந்தது. அங்கு கதைத்து நேரம் கழித்துக் கொண்டிருந்த வேளையில், நண்பியின் மீனவ மாமா கடலுக்குள் மீனவ படகில் கூட்டிச்செல்லவா என கேட்டார்.


ஹா...ஹா...நல்ல சந்தர்ப்பம் புது அனுபவம் தூரத்தில் இருந்து பார்த்த கடல் இனி அருகில் அனுபவிக்க நேரிட்டது. தூரத்தில் மெதுவாக அசைந்த அலைமகள் கடலுக்குள் பிரவேசிக்கும் போது சற்று ஆங்காரமாய் தான் இருந்தாள்.

அலைமகள் அசைவிற்கேற்ப வளைந்து நெளிந்து கடலின் அழகை ரசித்து முடித்து உப்பு தண்ணீரில் நனைந்த தோய்ந்து மீண்டும் கரையை வந்தடைந்தோம். பொழுது சாய்ந்தது கடற்கரை குளிர் காற்றில் நடுங்கி நிற்க அந்த கடற்பயணமும் முடிவடைந்தது. அலைமகளின் ஓசை மட்டும் காதிற்குள் கேட்டுக்கொண்டே இருக்கக் கரைகளைக் கடந்து ஒழுங்கைகளைக் கடந்து பாதைகளைக் கடந்து வர அலைமகள் ஓசையும் அடங்கியது.

நடுக்கத்துடன் வேகமாய் சென்று குளித்த பின்னர், இரவு யாழின் பாரம்பரியமான பிட்டும் இறைச்சிக் கறியும் சுவைத்து விட்டு இரவு 9 மணி அளவில் கொழும்பு -பருத்தித் துறை பேருந்தில் ஜன்னலோர இருக்கையுடன் பயணமும் முடிந்தது.

**“உப்புக் காற்றும் அலைகளின் சத்தமும் ஏதோ ஒரு புதிய உணர்வுகளைத் தோன்றியது. அந்தக்கரையோர சூழல் நான் பார்த்திராத பல விடயங்களைப் பார்க்கச் செய்ததென்றே கூறலாம். கடலை பார்த்தவாறு,கோவிலின் அருகில் நாவிற்கு விருந்தாய் பஜ்ஜிகடை என ஏதோ திரைப்படத்தின் ஒரு காட்சிபோல் வந்து சென்றது**






# கி.ராஜாவின் ‘பிஞ்சுகள்’ நாவல்



எஸ்.கிறிஸ்டினா,
ஊடககற்கை துறை மாணவி,
யாழ்.பல்கலைக்கழகம்.

கி.ராஜாவின் ‘பிஞ்சுகள்’ நாவல் ஒரு சிறுவயது பாத்திரம் மூலமாக சமுதாயம், குடும்பம், குழந்தைகள் மற்றும் பெருந்தோற்றம் ஆகியவற்றின் சிக்கல்களைக் குறிப்பிடுகின்றது.

‘பிஞ்சுகள்’ என்பது குழந்தைகளின் உலகத்தை மையமாகக் கொண்ட ஒரு கதை. நாவலில் குழந்தைகள் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை எப்படிச் சமாளிக்கிறார்கள், அவர்கள் சிந்தனை உலகம் எவ்வாறு பரிமாணம் கொள்கிறது என்பதை குறிப்பிடுகிறார். குழந்தையின் அகநிலையை உளவியல் ரீதியாக ஆராயும் வகையில் இந்நாவல் அமைக்கப்பட்டுள்ளது.

கதையின் மையத்தில் உள்ள சிறுவன், எளிமையான குடும்பத்தில் பிறந்தவனாகவும், சாதாரண சூழல்களில் வளர்ந்தவனாகவும் இருக்கிறான். அவனது வாழ்வின் அனுபவங்கள், அவன் சந்திக்கும் மக்களும், அவனின் கண்களால் பார்க்கப்படும் உலகும் மாறுபட்ட சிந்தனைகளை உருவாக்குகின்றன. பிறவியிலிருந்து வாழ்வின் நோக்குகள் எனும் கருத்துக்களைக் குழந்தையின் கேள்விகளின் மூலமாகவும், குழந்தையின் அனுபவங்களின் மூலம் குறிப்பிடுகிறார்.

கி.ராஜா தனது எழுத்தின் மூலம் குழந்தைகளின் உலகத்தை ஒரு காட்சிப் படம் போல, தெளிவாக வர்ணிக்கிறார். அவரது மொழி எளிமையானது, ஆனால், உள்ளார்ந்த சிந்தனைகளைக் கொண்டது. பிஞ்சுகள் நாவல், நம் மனதில் குழந்தை அனுபவங்களை மீண்டும் நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

பிஞ்சுகள் நாவல், குழந்தைகளின் மனோபாவங்களை மிக நுட்பமாகச் சித்திரிக்கிறது. அவர்களின் கேள்விகளும், எண்ணங்களும், சமூகத்தை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதையும் நாவல் ஆராய்கிறது.

குடும்ப உறவுகளின் முக்கியத்துவம், சிறுவர்கள் எப்படிப் பெற்றோரின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்கின்றனர். அவர்களின் மனத்தில் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதையும் இந்த நாவல் விவரிக்கிறது.

குழந்தைகளின் மூலமாக சமூகத்தில் நிலவும் அநீதிகளையும், வறுமை, துன்பங்கள் ஆகியவற்றை கி.ராஜா தனித்துவமான முறையில் வெளிப்படுத்துகிறார்.

நாவலின் இறுதியில், குழந்தையின் விழிப்புணர்வு அதிகரித்து, உலகத்தைப் புரிந்து கொள்வதில் சிறிய மாற்றம் நிகழ்கிறது. அவனது சிந்தனை உலகம் மெல்ல மாறுகின்றது.

நாவலின் முடிவில் குழந்தையின் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவுகள், அவனது நிலைப்பாட்டைத் தீர்மானிக்கின்றன. அவனுடைய பிரச்சினைகளும், குடும்பத்தின் தாக்கமும் முடிவடைகிறது.

நாவல் ஒரு எளிய குழந்தை மனதில் வெளிப்படும் சிக்கல்களைக் காட்டினாலும், அந்த சிக்கல்களின் மையம் ஒரு பெரும் சமூகத்தின் பிரதிபலிப்பாகவே விளங்குகிறது.

இப்படி, “பிஞ்சுகள்“ நாவல் குழந்தையின் உலகத்தை உணர்ந்து கொள்வதற்கான ஒரு திறவுகோலாகவும், சமூகத்தின் படிநிலைகளைக் குழந்தையின் கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தும் ஒரு இலக்கியமாகவும் அமைகிறது

இறுதியாக குழந்தை உலகத்தின் சிக்கல்களை மிக நுணுக்கமாகச் சித்திரிக்கிறது. நாவல் முழுவதும் குழந்தைகள் ச எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆழமாக விவாதிக்கப்படுகின்றன.

எச்.எச்.விக்கிரமசிங்க

# ஆபத்தில் உயிர்காத்த போராளி

லயனல் போப்பகே – அவுஸ்திரேலியா

1970களின் இறுதியில் ஆரம்பமான எச்.எச்.விக்கிரமசிங்க உடனான தொடர்பு, நீண்ட கால வெளியில் தோழராகவும் நண்பராகவும் நீடித்தது. உங்களின் முக்கால் நூற்றாண்டு வாழ்வு வியக்கத்தக்க நினைவுகளால் நிறைந்தது.

எங்களின் இளமை வாழ்வில் நாம் எதிர்கொண்ட சவால்கள் மிகப்பல. துயர் நிறைந்த பல தருணங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம்.எங்களின் மறக்கமுடியாத அரசியல் வாழ்வு
ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் ஆரம்பமானது. கொழும்பு-13, கே.சிறில் பெரேரா மாவத்தையில் அமைந்திருந்த வீரசிங்க மரக்காலையில் ஒரு சிறு அறையில் கூட்டு வாழ்க்கையாக அந்த வாழ்வு இருந்தது. முற்போக்கான அரசியலில் நாங்கள் அனைவரும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தோம். நீதியானதும் நேர்மையானதுமான உன்னத இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றும், அங்குதான் சகல இனங்களும் இணக்கத்தோடு வாழமுடியும் என்றும் நாங்கள் நம்பியிருந்தோம். அந்தக்கனவு இன்னும் அடைந்துதீர வேண்டிய கனவாகவே இருக்கிறது. எங்களின் வாழ்நாளில் அந்தக்கனவை அடைவோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

1970 தோழர் பிரின்ஸ் குணசேகரவும் ஏனைய தோழர்களும் முன்னின்று நடத்திய அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டத்தின்போது, இயக்கத்தில் நீங்கள் இணைந்தீர்கள். வீரகேசரி பத்திரிகையில் மிக நீண்ட நேரம் வேலை பார்த்துவிட்டு, பின்னர் கட்சி அலுவலகத்திற்கு வந்து, அன்றைய சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகள் பற்றி நீண்ட நேரம் கலந்துரையாடிச் சென்ற நாட்கள் என் நினைவில் பசுமையாக உள்ளன. அக்காலத்தில் மாத்தளை செல்வா என்று நீங்கள் அளிக்கப்பட்டதையும் ஜே.வி. பி யின் செயற்பாடுகளுக்குத் தமிழ்ப் பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து உதவியதையும் நான் அறிவேன். அங்கொடவில் கொகிலவத்தையில் அமைந்திருந்த ஜே.வி.பியின் சக்தி அச்சகத்தில் ஊடகம் சார்ந்த பல வேலைகளுக்கு உதவியிருக்கிறீர்கள்.

ஜே.வி.பி. நடத்திய 'செஞ்சக்தி' என்ற இயக்கத்தின் தமிழ்ப் பத்திரிகையில் தமிழ்க் கட்டுரைகளை ஒப்பு நோக்கிப் பார்த்துத் திருத்தி உதவியிருக்கிறீர்கள். எனது 'தேசிய இனப் பிரச்சினை பற்றிய ஒரு மார்க்சிய ஆய்வு' என்ற கட்டுரையினை மொழிபெயர்த்துத் தந்திருக்கிறீர்கள். இந்தக் கட்டுரையை நான், 1973இல் மேகசின் சிறைச் சாலையில் இருந்தபோது எழுதியிருந்தேன். ஜே.வி.பியின் முன்னணித் தலைவர்கள் மாத்தளை செல்லும்போதெல்லாம், உங்கள் பெற்றோரின் வீட்டிற்குச் சென்று, மறைந்த உங்கள் அன்னையின் விருந்தோம்பலில் மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம்.

கறுத்த ஜூலை இன சங்காரத்தினதும், 1983 ஜூலை மாதத்தில் ஜே.வி.பி. இயக்கம் தடை செய்யப்பட்டதின் பின்னரும் நிலைமை முற்றாகவே மாறிவிட்டது.பல்வேறு காரணிகளால், குறிப்பாக 1983இன் நடுப்பகுதிக்குப்பின் இலங்கையின் தேசியப்பிரச்சினை பற்றி ஜே.வி.பி. கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கெதிராக ஜே.வி.பியை விட்டு நான் விலக நேர்ந்தது. அதன் பின்னர் எங்களின் உயிர்ப்பாதுகாப்பிற்காக எங்கள் எங்கள் வழிகளில் போராடவேண்டியதாயிற்று. இந்த ஆபத்தான வேளைகளில் கட்சித் தோழர்களுக்கு நீங்கள் தொடர்ந்து உதவிக் கொண்டிருந்தீர்கள். ராகம சோம, சோமவன்ச அமரசேகர போன்ற தோழர்களுக்கு நிதியுதவியுடன் ஏனைய உதவிகளையும் செய்தீர்கள்.

பிலியந்தலையில் உள்ள பண்ணைக்குச் செல்ல வேண்டாம் என்ற உங்களின் ஆலோசனையைக் கேட்டிருந்தால், கேகாலையைச் சேர்ந்த தோழர் ரஞ்சிதம் குணரத்தினம், மாத்தளையைச் சேர்ந்த பெரியகருப்பையா தங்கராஜா போன்ற தோழர்களை நாம் இழந்திருக்கமாட்டோம். உங்கள் யோசனையைக் கேட்காமல், அங்குச் சென்ற அந்தத் தினத்திலேயே அவர்கள் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் தோழர் சோமவன்ச அமரசிங்கவிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் பெரும் உயிராபத்து காத்திருந்த வேளையில்,

அவர்களின் குடும்பத்தைப் பாதுகாப்பாக இந்தியா செல்வதற்கு, உங்கள் உயிரையும் பணயம் வைத்து நீங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டீர்கள். இந்தியாவிற்கு அவர்களுடன் சென்று, அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறவும் தனிப்பட பேருதவி புரிந்தீர்கள்.
ஓர் இராணுவ கெப்டனின் உதவியுடன் அமரசிங்க கொச்சிக்கடை வரை சென்று, அங்கிருந்து அவர் படகினூடாகத் தமிழகத்தின் திருச்செந்தூர் சென்று சேர்ந்தார். அதேவேளை, அமரசிங்கவின் மனைவியும் மகனும் பம்பாய்க்கு விமானம் மூலம் சென்று, அங்கிருந்து கேரளாவின் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தனர்.

அதே சமயம், நீங்கள் கட்டுநாயக்கவிலிருந்து விமானம் மூலம் இந்தியா சென்று, திருச்செந்தூரிலிருந்து அமரசிங்கவை திருவனந்த புரத்திற்குக் கூட்டிச்சென்று, அங்கு உங்களுக்குத் தெரிந்த ஒருவர்மூலம் வாடகைக்கு வீடு எடுத்துக்கொடுத்து, அமரசிங்க குடும்பத்தினரை அங்கு குடியமர்த்தினீர்கள். அங்கு சில காலம் அவர்கள் தங்கியிருந்து லண்டனைச் சென்றடைந்தனர். துபாயிலிருந்து தோழர் ரணசிங்க இந்தப்பிரயாணச் செலவுகளுக்கு உதவியிருந்தார்.

உங்களின் ஈடுபாட்டின் மீதான நம்பிக்கை, ஆளுமை, கைக்கொண்ட கொள்கையின் மீது நீங்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்பு என்பனவற்றிற்கு இது ஒரு குறி காட்டி. 1980களின் இறுதிப்பகுதியில்



**1983 ஜூலை மாதத்தில் ஜே.வி.பி. இயக்கம் தடை செய்யப்பட்டதின் பின்னரும் நிலைமை முற்றாகவே மாறிவிட்டது.பல்வேறு காரணிகளால், குறிப்பாக 1983இன் நடுப்பகுதிக்குப்பின் இலங்கையின் தேசியப்பிரச்சினை பற்றி ஜே.வி.பி. கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கெதிராக ஜே.வி.பியை விட்டு நான் விலக நேர்ந்தது. அதன் பின்னர் எங்களின் உயிர்ப்பாதுகாப்பிற்காக எங்கள் எங்கள் வழிகளில் போராடவேண்டியதாயிற்று. இந்த ஆபத்தான வேளைகளில் கட்சித் தோழர்களுக்கு நீங்கள் தொடர்ந்து உதவிக் கொண்டிருந்தீர்கள்**

நம்மிருவருக்கும் ஏற்பட்ட உயிராபத்துகளிலிருந்து நாம் தப்பித்திருக்கிறோம். 1990 ஒக்டோபர் மாதத்தில் நீங்கள் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு 1992இல் நீங்கள் விடுதலை அடைந்தீர்கள்.

அந்த ஆபத்தான நாட்களின் பின், நாங்கள் வெவ்வேறு பாதைகளில் பயணிக்கவேண்டியதாயிற்று. உங்களை எதிர்நோக்கியிருந்த கஷ்டங்களை வென்று, உங்களால் இயன்ற அளவு உங்கள் சமூகத்திற்கும் இலங்கை மக்களுக்கும் நீங்கள் சமூகப்பணியாற்றி யிருக்கிறீர்கள். நீங்கள் என்மீது கொண்டிருந்த நன்னம்பிக்கைக்கு நான் பெரும் நன்றியுணர்வு கொண்டவனாயிருக்கிறேன். நாங்கள் யாருமே எந்த உதவியும் செய்துகொள்ள முடியாத நிலையில், உங்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்தும், நெருக்கடி மிகுந்த சூழலில் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் நீங்கள் நம்பிக்கையுடன் என்னுடன் ஆலோசித்ததை நான் நினைவுகூர்கிறேன்.

1989இல் இலங்கையை விட்டு வெளியேறியபின், நான் இலங்கை வந்தபோதோ, அல்லது நீங்கள் அவுஸ்திரேலியா வந்தபோதோ நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளத் தவறியதில்லை. எங்களின் பிள்ளைகள் தொழில்துறைசார் வல்லுநர்களாக வளர்ந்து விட்டனர். தங்களின் சொந்தக் குடும்பங்களுடன் பேரக்குழந்தைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வளமாக வாழ்வதைப் பார்க்கச் சந்தோஷமாயிருக்கிறது. வாழ்க்கையில் எங்களின் காலடிகளை அவர்கள் பின்பற்றிச் செல்லவில்லை. அவ்வாறு அவர்கள் எங்களைப் பின்பற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. இந்தச் சிக்கலான உலகில் நின்று பிடிக்கவும் இணைந்து போகவும் அவர்கள் தயாராகி வருகிறார்கள். தங்களின் சொந்த வழிகளில், உன்னத உலகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதில் அவர்கள் தங்களின் பணிகளை ஆற்றி வருகிறார்கள் என்பதை நாம் பாராட்டவேண்டும்.

எங்களின் தனிப்பட்டதும் அரசியல் சார்ந்ததுமான வாழ்வு ஐந்து தசாப்தங்களை நெருங்கி விட்டது. அது எம் வாழ் நாள்வரை நீடிக்கும். எங்களின் நண்பர்களுக்கு வழங்கும் பிறந்தநாள் வாழ்த்துகளில் ஒரு பொதுத் தன்மை உண்டு. சமூக நீதி, நேர்மையான வாழ்வு என்ற பரந்த கருத்தாடல்களுக்குப் பங்கம் ஏற்படாத வகையில், எங்களின் வாழ்வில் நாங்கள் ஆற்றிய சமூகப்பணியினைப் பாராட்டும் பண்பே அது. நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, நிம்மதியான, ஆக்கப்பூர்வமான வாழ்த்துகளையே ஆசித்திருக்கிறோம். ஆனால், நாம் தொடர்பு கொண்டிருந்த ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். அவர்களது ஆளுமைக்கும் அரசியலுக்கும் ஏற்ப விசேடமான குணாம்சங்களை அவர்கள் கொண்டிருக்கக்கூடும். நாங்கள் நேசிக்கும் நண்பர்களுக்கு நாங்கள் தெரிவிக்கும் நல்வாழ்த்துகள் மனதின் எதிரொலி மட்டுமல்ல, அவை உண்மையானதுமாகும்.

நல்ல ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் நீங்கள் செய்ய நினைக்கிற பணிகளில் எல்லாம் வெற்றி பெறவும் என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். எங்கள் வாழ்வில் எந்தக் கஷ்டங்களை நாங்கள் எதிர்கொண்டிருந்தபோதும், எங்கள் வாழ்விலும் சமூகத்திலும் எங்களின் உதவியை நாடி நின்றவர்களுக்கு அக்கறையோடு உதவ முனைந்திருக்கிறோம் என்பதை எங்களின் பேச்சிலும் செயலிலும் நாங்கள் நிரூபித்திருக்கிறோம்.

உங்களின் எதிர்கால முயற்சிகள் அனைத்திலும் வெற்றிகாண என் இதயப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். நீங்கள் அடைய நினைத்தவற்றை உங்கள் வாழ்நாளில் அடைவீர்கள் என்பது உறுதி.

கடந்து போன உங்களின் எழுபத்தைந்து ஆண்டு கால வாழ்க்கை இனிய நினைவுகளால் பொலிவதாக! வாழ்க்கையில் இன்னும் அழகிய தருணங்கள் காத்திருக்கின்றன.



# 'லெவல் க்ராஸ்'

மலையாள சினிமாவில் மிக முக்கியமான நடிகராக ஆசிஃப் அலி உள்ளார். இவர் நடிப்பில் கடந்த மாதம் வெளியான கிஷ்கிந்தா காண்டம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது.

இதற்கு முன் ஆசிஃப் அலி மற்றும் அமலா பால் இணைந்து நடித்து கடந்த ஜூலை மாதம் வெளியாகிய 'லெவல் க்ராஸ்' மக்கள் மத்தியில் கலவையான விமர்சனத்தை பெற்றது.

ஆடுஜீவிதம் திரைப்படத்திற்கு பிறகு அமலா பால் இப்படத்தில் நடித்துள்ளார். இத்திரைப்படம் அறிமுக இயக்குநரான அர்ஃபாஸ் அயுப் இயக்கியுள்ளார்.

இப்படத்தை திரிஷ்யம் படத்தை இயக்கிய பிரபல மலையாள இயக்குநர் ஜித்து ஜோசஃப் வழங்கியுள்ளார். இந்த நிலையில், லெவல் கிராஸ் திரைப்படம் ஓடிடியில் வெளியாகியுள்ளது.

அமேசான் பிரைம் வீடியோவில் தமிழ், இந்தி, கன்னடம் மலையாளம், ஆகிய மொழிகளில் இந்தத் திரைப்படம் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இணையும்

# ஹிட் ஜோடி



கடந்த 2016ஆம் ஆண்டு தனுஷ் மற்றும் கீர்த்தி சுரேஷ் நடிப்பில் உருவான 'தொடரி' என்ற திரைப்படத்தை அடுத்து, மீண்டும் தனுஷ் மற்றும் கீர்த்தி சுரேஷ் ஒரு திரைப்படத்தில் இணைந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தனுஷ் இயக்கத்தில் உருவான 'ராயன்' திரைப்படம் அண்மையில் வெளியான நிலையில், அவர் தற்போது 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' என்ற படத்தை இயக்கி முடித்துள்ளார்.

அத்துடன், 'இட்லி கடை' என்ற படத்தை தனுஷ் இயக்கி வருகிறார். இந்த படத்தில் நித்யா மேனன் நாயகியாக நடிக்கிறார் இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.


இந்த நிலையில். 'இட்லி கடை' படத்தை முடித்து விட்டு, அடுத்ததாக தனுஷ் இன்னொரு படத்தை இயக்க இருப்பதாகவும், அந்த படத்தில் நாயகியாக கீர்த்தி சுரேஷ் நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

'தொடரி' படத்திற்குப் பிறகு, 9 ஆண்டுகளுக்குப் பிறகு, தனுஷ் மற்றும் கீர்த்தி சுரேஷ் இணையவுள்ள இந்த படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, 'குபேரா' மற்றும் 'இளையராஜாவின் வாழ்க்கை வரலாறு' ஆகிய திரைப்படங்களில் தனுஷ் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

'கங்குவா' படத்தில்

# பல குரலில் பேசும் சூர்யா



சூர்யாவின் 'கங்குவா' திரைப்படம், தமிழ் உட்பட சுமார் 10 மொழிகளில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அனைத்து மொழிகளிலும் சூர்யா குரல் ஒலிக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா கூறியதாவது, சூர்யா தன்னுடைய கதாபாத்திரத்துக்காக தமிழில் மட்டுமே டப்பிங் செய்யவுள்ளார். ஆனால், மற்ற மொழிகளிலும் திரையில் சூர்யாவின் குரலே ஒலிக்கிறது போல இருக்கும்.

சூர்யாவின் கேரக்டருக்கு வேறொருவர் டப்பிங் செய்தாலும் ஏஐ டெக்னாலஜி மூலம் சூர்யாவின் குரல் அனைத்து மொழிகளிலும் மாற்றம் செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் வெளியான 'வேட்டையன்' திரைப்படத்திலும் AI தொழில்நுட்பத்தின் மூலம் அமிதாப் பச்சனின் குரல் மாற்றப்பட்டதுபோல், சூர்யாவின் குரலும் அதே முறையில் மாற்றப்பட இருப்பதாகவும், அதனால் தமிழ் உள்பட அனைத்து மொழிகளிலும் ரசிகர்கள் சூர்யாவின் குரலை கேட்க முடியும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

சூர்யா, திஷா பதானி, பாபி தியோல், நட்டி, ஜெகபதி பாபு, யோகிபாபு, ரெடின் கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த்ராஜ், ஜி மாரிமுத்து, தீபா வெங்கட் மற்றும் கேஎஸ் ரவிகுமார் உள்பட பலர் இந்தப் படத்தில் நடித்துள்ளனர்.

தேவிஸ்ரீ பிரசாத் இசையில், வெற்றி பழனிசாமி ஒளிப்பதிவில், நிஷாத் யூசுப் படத்தொகுப்பில் உருவாகியுள்ள 'கங்குவா' படம் சுமார் 350 கோடி ரூபாய் செலவில் உருவாகியுள்ளது.



முன்னாள் மனைவி புகார்

# தமிழ் நடிகர் கைது

முன்னாள் மனைவி அளித்த புகாரை அடுத்து, தமிழ் நடிகர் பாலா பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிறுத்தை சிவாவின் சகோதரரும், தமிழ் மற்றும் மலையாள திரையுலக நடிகரான பாலா, தமிழில் அன்பு, காதல், கிசுகிசு, தம்பி, அண்ணாத்த உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். கடந்த 2010இல் பாடகி அம்ருதா சுரேஷ் என்பவரை திருமணம் செய்த நிலையில், 2019இல்இருவருக்கும் விவாகரத்து செய்ததுடன், அம்ருதா இசையமைப்பாளர் கோபி சுந்தர் திருமணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில், முன்னாள் மனைவி அம்ருதா தன்னை முன்னாள் கணவர் பாலா பின் தொடர்ந்து துன்புறுத்துவதாகவும், தனது மகளை துன்புறுத்துவதாகவும் புகார் அளித்துள்ளார்.

இதனையடுத்து திங்கட்கிழமை (14) காலை பாலாவை பொலிஸார் கைது செய்தனர்.



# கார் பந்தயத்துக்கு தயாராகும் கீர்த்தி சுரேஷ்

நடிகர் அஜித்தை தொடர்ந்து நடிகை கீர்த்தி சுரேஷ் கார் பந்தய போட்டிகளில் கலந்து கொண்ட வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில், கார் பந்தயம் குறித்த விஷயங்களை கேட்டறிந்து, அதற்கேற்ப உடை அணிந்து கார் பந்தய போட்டியில் ஈடுபடும் காட்சிகள் உள்ளன. மேலும், இந்த பதிவில் "அதிசய அனுபவங்களுடன் நினைவுகளை உருவாக்குகிறேன்" என்று கேப்ஷனாக பதிவிட்டுள்ளார்.

நடிகை கீர்த்தி சுரேஷ் நடித்த 'ரகு தாத்தா' என்ற திரைப்படம் அண்மையில் வெளியான நிலையில், தற்போது அவர், 'ரிவால்வர் ரீட்டா', 'கன்னிவெடி' மற்றும் 'பேபி ஜான்' ஆகிய மூன்று படங்களில் நடித்து வருகிறார்.

இந்த படங்கள் அனைத்தும் அடுத்தடுத்து வெளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.





## பௌத்தர்களின் நாட்டுப்புற நாட்டார் கலையில்

# 'லீ கெலி'



ரிகாஸா ரிபாஸ்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

உலகின் ஒவ்வொரு நாட்டிற்கும் சமயத்திற்கும் அதன் சொந்த கலாசாரம் மற்றும் மரபுகள் காணப்படுகின்றன. அந்நாடுகளில் கிராமப்புற மக்களால் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு நாட்டார் கலை வடிவமும் காணப்படும். நாட்டார் கலை வடிவங்கள் பெரும்பாலும் கிராமப்புற மக்களின் எண்ணங்கள், விருப்பங்கள், மதங்கள், வாழ்க்கை, தொழில்கள், அனுபவங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பல அம்சங்களைப் பிரதிபலிக்கின்றது. நாட்டார் கலை வடிவமானது ஒரு மூலத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. வடிவத்திற்கும் அதன் சொந்த கலாச்சார பின்னணி உள்ளது. நாட்டின் தேசியத்தைப் பிரதிபலிக்கும் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்டிருந்தாலும் வடிவத்தில் பொதுவான ஒற்றுமையைக் கொண்டுள்ளது. எளிமையான வாழ்க்கை முறை மற்றும் சமூக உறவுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அவ்வகையில், இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும் நாட்டின் தனித்துவமான பண்புகளை எடுத்துக் காட்டும் பல கிராமப் புற நாட்டார் கலை வடிவங்கள் காணப்படுகின்றன. இந்நாட்டார் கலை வடிவங்கள் ஒவ்வொரு சமயத்தில் இருந்தும் சற்று வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. அவ்வகையில், பௌத்த மக்களால் பாரம்பரியமாக நிகழ்த்தப்பட்டு வரும் நாட்டார் கலை வடிவமான மர விளையாட்டு நடனத்தை அந்நடனத்தில் தேர்ச்சி பெற்ற கலைஞரின் அனுபவத்தோடு பார்க்கலாம்.

'கெலி' எனும் பெயரால் குறிப்பிடப்படுவது 'விளையாட்டு' என்பதாகும். மிகவும் பழைமையான காலத்தில் விளையாட்டு என்ற வகையில் இது அறியப்பட்டது. மர விளையாட்டு பௌத்த கிராமப்புற மக்களுக்கே உரித்தான நாட்டுப்புற நடனம் என ஜே.ஈ.சேதரமன் தனது மேல்நாட்டு நடனப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிடும் போது, மர விளையாட்டு நடனக் குழு ஓய்வு நேரங்களில் விகாரையின் முன்றலில் அல்லது ஒரு தோட்டத்தின் முற்றத்தில் தமது பொழுதுபோக்கிற்காக ஆடிய நடனம் என கூறப்படுகின்றது. தற்காலத்தில் இம்மர விளையாட்டு நடனம் பௌத்தர்களின் கிராமிய நடனங்களின் வரிசையில் மிகவும் பிரசித்தம் பெற்றது என்றே கூறலாம். பௌத்தர்களின் பெரஹராக்கள் மற்றும் விகாரையின் விசேட நிகழ்வுகளில் இந்நடனம் நிகழ்த்தப்படும்.

இந் நடனத்திற்காக இசைக்கப்படும் பாடல் வரிகள் மதம் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியதாகவே காணப்படும். "போ பத்தினி நான் நான்கு தெய்வங்களிடமும் அனுமதி கேட்கிறேன்..."

இப்பாடல் அடிகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். சூரியன் சந்திரன் மற்றும் மரஞ்செடி கொடிகளைக் கடவுளாக வணங்குதல், கடவுளிடம் அனுமதி கேட்டல், தங்கள் குல கடவுளுக்கு ஆராதனை செய்தல் என்ற அம்சங்களை இந் நடனத்தின் பாடல் அடிகளில் நாம் காணக்கூடியதாக இருக்கும். ஒரு கிராமவாசியின் கடவுள் நம்பிக்கை எவ்வாறு இருக்கும் என்பதற்கு இம்மர விளையாட்டு நடனமும் அதற்கேற்ற பாடல் வரிகளும் சான்றாகும்.'லீ மல்லிய' எனப்படும் ஒரு வகை தாளத்தை இந் நடனத்தில் பாவிப்பது இந் நடனத்தின் விசேட அம்சம் என்றே கூறலாம். கம்பளை இராசதானி காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் எம்பக்க தேவாலய ஓவியங்களில் ஒரு வரியில் மர விளையாட்டு நடனம் இடம்பெற்றுள்ளது. பழைய மன்னர்களின் இராணுவ பிரிவுகளை அடக்கிய காலாற்படை தங்கள் கைகளில் தடிகளுடன் சண்டையிடு துருப்புக்களை கொண்டுள்ளது. அச்செயற்பாடுகளை உருவகப்படுத்தும் ஒரு விளையாட்டு மர விளையாட்டு மோதலை உருவாக்க ஒரு காரணியாக உள்ளது. அதுமட்டுமின்றி, போர் வீரர்களுக்குப் போரை நினைவு கூறுவதாகவும் அமைகின்றது. இலங்கையின் ஹங்குரன்கெத்தவில் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிடத்தில் இருந்து இரண்டு குச்சி நடனக் கலைஞர்களின் மர விளையாட்டு நடன செதுக்கள் ஒன்று தற்போது கொழும்பில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளமையும் இந் நடனத்தின் பழைமையையே எடுத்துக்காட்டுகின்றது.



அதேபோன்று, முதலில் இலங்கையின் ஹங்குரன்கெத்தவில் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த அதேபோன்று, முதலில் இலங்கையின் ஹங்குரன்கெத்தவில் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிடத்தில் இருந்து இரண்டு குச்சி நடனக் கலைஞர்களின் இந்த செதுக்கள் தற்போது கொழும்பில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட துறையிலோ அல்லது விடயத்திலோ அறிவை விருத்தி செய்வதற்காக முறையாகவும் முழுமையாகவும் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வின் அடிப்படையில் நாட்டார் கலை வடிவ ஆய்வுக்காக நான் தெரிவு செய்த விடயம் பௌத்த மக்களால் பாரம்பரியமாக நிகழ்த்தப்பட்டு வரும் மர விளையாட்டு என்னும் நடன முறை ஆகும். ஆய்வாளர் மக்களை மற்றும் சம்பவங்களை அவதானித்து மக்களுடன் உரையாடி தகவல்களை பெறும் பண்பியல் ஆய்வு முறையின் அடிப்படையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வானது குருநாகல் மாவட்டத்தின் நிகவெரட்டிய பிரதேசத்தில் அமைந்திருக்கும் இஹல ஒட்டுக்குளம் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் காலங்காலமாக நிகழ்த்தப்பட்டு வரும் நாட்டார் கலை வடிவமான மர விளையாட்டு நடனத்தைப் பற்றியதாகும்.

இந்நடனத்தில் கலைஞராகப் பங்கேற்று தற்போது நடன ஆசிரியராக நடனத்தைக் கற்றுக் கொடுக்கும் பி.என்.சுரன்ஜி ரஷோமாஎன்பவருடனான நேர்காணல் மூலமே இவ் ஆய்வை மேற்கொண்டேன். சமூக வலைத்தளங்கள் மற்றும் பௌத்த நடனங்கள் சம்பந்தமான புத்தகங்கள் மற்றும் அந் நடனத்தின் பார்வையாளர்கள் மூலமாகவும் எனது தகவல் திரட்டல் அமைந்தது.

### நடன நிகழ்த்து முறை

நிகழ்த்து முறை என்பது ஒரு நிகழ்வு நிகழ்த்தப்படும் சூழலில் கலைஞர் ஒருவரோ பலரோ தங்கள் முகம், உடல் அல்லது இருப்புக் கொண்டு நிகழ்த்தும் கலை வடிவம் ஆகும். பௌத்தர்களின் கிராமிய நடனமான மர விளையாட்டு நடனமானது ஒருவருடன் மட்டுமல்ல அது இருவருடன் சம்பந்தப்பட்ட விளையாட்டு ஆகும். 'மரத்தை இரண்டாகப் பிரித்து ஆடுவோம்' என்ற வகையில் இரண்டு பகுதிகளாக அமர்ந்து நிகழ்த்தப்படுகின்றது. மிகவும் நுணுக்கமான முறையில் அவதானிக்கும் போது, ஒருவர் அடுத்தவரைத் தாக்கும் வகையில், ஒரு மரத் தடியை மற்றவரை நோக்கி அடிக்க அடுத்தவர் தன் தடியால் அதனைத் தடுப்பதாக இந்நடனம் இடம்பெறும். ஒரே அளவிலான வண்ணம் பூசப்பட்ட தடிகளை இங்கு பயன்படுத்தப்படும் தாளத்துக்கும் இசைக்கும் ஏற்ப ஒன்றுடன் ஒன்று தட்டிக் கொண்டே ஆடப்படும் நடன முறையும் ஆகும். இந்நடன நிகழ்த்து முறைக்கு மிகவும் எளிமையான ஆடை முறையே காணப்படும்

### பங்கேற்கும் கலைஞர்கள்

மர விளையாட்டு நடனமானது மலையக கைவினைஞர்களின் அடையாளமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. மர விளையாட்டு நடனம் ஆரம்பத்தில் பெண்களுக்கு உரித்தான நடனமாகவே சித்தரிக்கப்பட்டது. உள்ளூர் தற்காப்புக் கலைகளின் நடைமுறையில் இருந்து உருவாக்கப்பட்ட விளையாட்டாக இருந்த போதிலும் இது ஒரு நடனமாக அதன் அமைப்பின் அடிப்படையில் பெண் நடனமாக மாற்றப்பட்டது. என்றாலும் ஆண்களும் தற்காலத்தில் இந்நடனக் கலையில் ஈடுபடுகின்றார்கள்.

இந் நடனத்தில் பங்கு பெறும் கலைஞர்களுக்கு வயதெல்லை கிடையாது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந் நடனத்தில் ஈடுபடுவர். பங்கேற்கும் கலைஞர்கள் பாடும் திறமைகளையும் பெற்றிருப்பர். அதாவது, மரத் தடிகளை அடித்து நடனமாடும் போது அதற்கேற்ற பின்னணிப் பாடல்களைப் பாடுவதில் வல்லமை பெற்றவர்களாகவும் இருப்பர்.

### பெறுநர்களின் வகிபங்கு

மர விளையாட்டு நடனம் எனும் போது பெறுநர்கள் அந் நடனம் தொடர்பான புரிதலை அதிகமாகவே கொண்டிருப்பார்கள். நடனமானது தொடர்ந்து முக்கிய விழாக்களில் நிகழ்த்த பெறும் போது, அதன் குறை நிறைகளைக் கலைஞர்களிடம் முன்வைப்பதில் பெறுநர்கள் ஆற்றல் பெற்றிருப்பார்கள். சிலர் இந் நடன முறையை அலட்சியமாகக் கருதினாலும் இன்னும் பல பெறுநர்கள் அதன் பெறுமதியை சக மக்களிடம் எடுத்து விளக்குவார்கள். அடுத்த தலைமுறையினருக்கும் இம்மர விளையாட்டு நடனத்தைக் கொண்டு செல்லும் வகையில் பெறுநர்கள் கலைஞர்களுக்கு ஆர்வமூட்டி அவர்களை ஊக்குவிப்பார்கள்.



### அடையாளம் காணக்கூடிய தொடர்பாடல் பண்புகள்

தற்காப்புக் கலையை ஒத்ததான மர விளையாட்டு நடனத்தில் பல்வேறு தொடர்பாடல் பண்புகள் பொதிந்துள்ளமையை அவதானிக்க முடியும். நம் அன்றாட வாழ்வில் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இந்நிலையில், எதிர்த்து நின்று போராட வேண்டும் என்ற தொடர்பாடல் செய்தியை இந் நடனம் மக்களுக்கு வழங்குகின்றது. அதுமட்டுமின்றி இந் நடனத்தின் பாடல் வரிகள் சமயம் சார்ந்ததாகவும் கடவுள் நம்பிக்கையை பறைசாற்றுவதாகவும் அமைகின்றது. எனவே இந் நடனத்தின் மூலம் சமய நம்பிக்கைகள் எடுத்துக் கூறப்படுவதும் தொடர்பாடல் பண்பாகவே கருதப்படுகின்றது.கலைஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பை உண்டாக்கும் வகையில் ஒரு சிறிய நேரத்தில் நிறைய மாற்றங்களை ஏற்படுத்த கூடியதாக அமைகின்றது.

### நடனம் சார்ந்த சமூக மதிப்பீடுகள்

இந் நடனத்தைப் பற்றிய சமூக மதிப்பீடுகள் மிகவும் பெறுமதியானவை என்றே கூறலாம். அதாவது தேசிய பாரம்பரியத்தை பேணும் வகையிலான நடனங்கள் சமூகத்தில் எப்போதுமே போற்றப்பட்டே வருகின்றது. மர விளையாட்டு நடனமும் போற்றப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் நிகழ்த்தப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூகத்தின் பல்வேறு தேவைகளையும் சமூகத்தின் நடத்தைகளையும் தெளிவுபடுத்தும் வகையில் அமைவதால் சமூகத்தில் விரைவாக உள்வாங்கப்படும் ஆற்றலையும் கொண்டது. இந்நடனம் பழைய மன்னர்களின் போரின் தற்காப்புத் தன்மையை குறிப்பிடுவதாக அமைவதால் சமூகத்தில் ஓர் பெறுமதியான இடத்தையும் பிடித்துள்ளது.

### நடனக் கலை எதிர்நோக்கும் சவால்கள்

கிராமிய நடனத்திற்கான ஆர்வம் இளைய தலைமுறையினரிடம் காணப்பட்டாலும் பெற்றோர்கள் மேலைத்தேய நடனங்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றனர். இதன் காரணமாக மர விளையாட்டு நடனத்திற்கு இது பெரும் சவாலாக அமைகின்றது. தற்காலத்தில் இளைஞர்கள் கிராமிய நடனத்தை அரங்கேற்றும் போது அதனைக் கண்டு கொள்வதில் அலட்சியம் காட்டி அதுவே இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் போது அதற்கு முன்னுரிமை வழங்குகின்றார்கள். எனவே, இந்நடனத்தை தொடர்ந்து அரங்கேற்றுவதில் பாரிய சவாலை எதிர்நோக்குகின்றது. அதுமட்டுமன்றி, பாரம்பரிய நடனத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேவைப்பாட்டை மக்கள் உணராமல் இருப்பதும் இந் நடனத்தின் பாரிய சவாலாகவே கருதப்படுகின்றது. விகாரைகளின் விசேட நாட்களில் தங்கள் கலாச்சாரத்தைப் பேணும் வகையில் இந் நடனங்கள் நிகழ்த்தப் பெற்றாலும் அதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் தற்கால சமூகத்தில் நிலவாமை இதற்கு பெரும் சவாலாக அமைகின்றது.

> **இலங்கையின் ஹங்குரன்கெத்தவில் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிடத்தில் இருந்து இரண்டு குச்சி நடனக் கலைஞர்களின் மர விளையாட்டு நடன செதுக்கள் ஒன்று தற்போது கொழும்பில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளமையும் இந் நடனத்தின் பழைமையையே எடுத்துக்காட்டுகின்றது**

நடனத்தின் பயன்பாடுகள் சவாலான தற்காலத்தில் வெற்றிகரமான வாழ்க்கை முறையைப் பேணுவதற்கும் நாம் உடல் மற்றும் உளம் சார்ந்து ஆரோக்கிய நிலைகளை விருத்தி செய்வதற்கும் இந்நடனம் வழிவகுக்கும். தேசிய கலாச்சார சூழலின் தன்மையையும் பாரம்பரியத்தையும் நடனம் இசை மற்றும் தாளத்துடன் வழங்கும் பயன்பாடு மிகுந்த கலை வடிவமாகும். இயற்கையின் பெறுமதியையும் சமயத்தின் முன்னுரிமையையும் உணர்த்தும் வகையில் இந் நடனத்தின் பாடல் வரிகள் அமையப்பெற்றுள்ளது. எனவே, தற்கால தொடர்பாடல் சூழலில் இது மிகவும் பயனுள்ள கலை வடிவமாகவே இனங் காணப்படுகின்றது. அன்றாட வாழ்வில் ஏற்படும் பல்வேறு பிரச்சினை நிலைமைகளை ஆக்கப்பூர்வமாக எதிர்கொள்ளவும் கிராமிய நடனம் தொடர்பான ஆக்கப்பூர்வமான படைப்புக்களை உருவாக்குவதற்கும் ஆர்வம் கொள்ளும் தலைமுறையினரை உருவாக்கும் பயன்பாடு மிக்க நாட்டார் கலை நடனம் ஆகும்

இலங்கையில் பௌத்த நாட்டார் கலை வடிவத்தில் மர விளையாட்டு நடனம் மிகவும் ஆழமான முறையில் மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளது. நமது சமூகம், சமயம், கலாசாரம் சார்ந்து மட்டுமல்லாது, எல்லா சமய கலாசாரங்களின் நாட்டார் அம்சங்களையும் அறிந்து வைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை இவ் ஆய்வு ஏற்படுத்தியது. நாட்டார் கலை வடிவங்களை அழிந்து போக விடாது அதன் பெறுமதிகளை உணர்ந்து செயற்பட்டு நாட்டார் கலை வடிவங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

மகாராஷ்டிரா

# சல்மானுக்கு மிரட்டல்



பாபா சித்திக் கொலைக்கு லாரன்ஸ் பிஷ்னோய் கும்பல் பொறுப்பேற்றுக்கொண்டதுடன், நடிகர் சல்மான் கானுக்கு உதவி செய்பவர்களுக்கு பகிரங்க மிரட்டலையிம் விடுத்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் முன்னாள் அமைச்சர் சித்திக், கடந்த சனிக்கிழமை (12) இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது படுகொலை சம்பவத்துக்கு பிஷ்னோய் கும்பல் பொறுப்பேற்றது.

இது தொடர்பாக பிஷ்னோய் கும்பலுக்கு தொடர்புடைய ஷுபு லோங்கர் என்ற நபர், தனது முகநூல் பக்கத்தில் பகிரங்க அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த பதிவில், “இந்தியாவின் தேடப்படும் பயங்கரவாதி தாவூத் இப்ராகிமுடன் தொடர்பு கொண்டிருந்தது. சல்மான் கானுடன் நெருக்கமாக இருந்த காரணத்தால் தான் சித்திக் கொல்லப்பட்டார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான பதிவில், “எங்களுக்கு யாருடனும் பகை இல்லை, ஆனால் சல்மான் கான் மற்றும் தாவூத் கும்பலுக்கு யார் உதவினாலும், உங்கள் கணக்குகளை முடிப்போம்,” என்று லோங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தைத் தொடர்ந்து, மும்பை தெற்கில் உள்ள மலபார் ஹில் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர்


காஷ்மீரில்

## ஜனாதிபதி ஆட்சி வாபஸ்

ஜம்மு-காஷ்மீரில் ஜனாதிபதி ஆட்சி வாபஸ் பெறப்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் கடந்த 2019, ஒக்டோபர் 31ஆம் திகதி முதல் ஜனாதிபதி ஆட்சி அமலில் இருந்து வந்தது.

ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்ட பிறகு அங்கு சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. இதில், தேசிய மாநாட்டு கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.



ஜம்மு-காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவை சந்தித்த ஒமர் அப்துல்லா, எம்.எல்.ஏ.க்கள் கையெழுத்திட்ட ஆதரவு கடிதத்தை வழங்கி ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.


விரைவில் புதிய முதலமைச்சராக ஒமர் அப்துல்லா பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீரில் ஜனாதிபதி ஆட்சி வாபஸ் பெறப்பட்டுள்ளது.

தமிழகம்

தமிழக வெற்றிக் கழக மாநாடு:

## கூடுதலாக 50 ஏக்கர் நிலம் தெரிவு




தமிழக வெற்றிக் கழக மாநாட்டுக்காக, வாகனங்கள் நிறுத்துவதற்காக சுமார் 25 ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரை நிலங்கள் தெரிவுசெய்யப்பட உள்ளது.

விஜய்யின் தமிழக வெற்றிக் கழக மாநாடு வருகிற 27ஆம் திகதி, விக்கிரவாண்டி அருகேயுள்ள வி.சாலை இடத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக, சுமார் 85 ஏக்கர் நிலப்பரப்பில் மாநாட்டுக்கான இடம் தெரிவு செய்யப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாநாட்டில் சுமார் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாநாட்டில் பங்கேற்க வருவோர் வசதிக்காக வாகனங்கள் நிறுத்துவதற்கு என்று பல ஏக்கர் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.



தாய்வான்

தாய்வானைச் சுற்றியுள்ள கடற்பரப்பில்

## சீனா போர் ஒத்திகை

தாய்வானைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் ஜாயின்ட் ஸ்வார்ட் ‘2024பி’ என்ற பெயரில் போர் ஒத்திகையை சீனா தொடங்கியுள்ளது.

தாய்வானைச் சுற்றிலும் போர் ஒத்திகை நடப்பதை சீன இராணுவம் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளது.

தாய்வான் மீது தாக்குதல் நடத்துவதை உருவகப்படுத்தி, 9 இடங்களில் ஒத்திகை நடத்தப்படுவதாக, சீன இராணுவம் தெரிவித்துள்ளது.

தாய்வான் தீவைச் சுற்றிலும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட சீன கடலோர காவற்படையும் சில கப்பல்களை அனுப்பி வைத்துள்ளது. இந்த ஒத்திகையில் தரைப்படை, கடற்படை, விமானப்படை, ரொக்கெட் படை மற்றும் பிற படையினரும் பங்கேற்றுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7 கடற்படை போர்க் கப்பல்கள், 25 போர் விமானங்கள் மற்றும் 4 கப்பல்கள் இருப்பதை கண்டுபிடித்திருப்பதாக தாய்வான் தெரிவித்துள்ளது.

சீன கடலோர காவல்படையும் இந்த ஒத்திகையில் பங்கேற்றுள்ளது.

போர்க்கப்பல்களும், போர் விமானங்களும் பல முனைகளில் இருந்தும் கூட்டு தாக்குதல் நடத்துவதற்கான ஒத்திகையில் ஈடுபட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

போருக்கான தயார் நிலை, முக்கிய துறைமுகங்களை முற்றுகையிடுவது, கடல் மற்றும் தரைவழித் தாக்குதல்கள் போன்றவற்றை முன்னிறுத்தி இந்த ஒத்திகை நடப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா

ட்ரம்ப் கூட்டத்தில்

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது


ட்ரம்ப் உரையாற்றிக் கொண்டிருந்த கூட்டத்தில், சட்டவிரோதமாக கைத்துப்பாக்கி வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் களம் காணும் டொனால்டு ட்ரம்ப் கலிபோர்னியாவை அடுத்த கோச்செல்லாவில், சனிக்கிழமை (12), தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வந்தார்.

இதன்போது, ட்ரம்ப் பங்கேற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட நபர் ஒருவர் சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டதை ரிவர்சைடு கவுண்டி ஷெரிப் அலுவலகம் உறுதுப்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்தின் போது ட்ரம்ப், பேரணியில் கலந்து கொண்ட யாருக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என்று பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

“கைது செய்யப்பட்ட நபர் சிறையில் அடைக்கப்படவில்லை என்ற போதிலும், தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது” என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



ஐஸ்லாந்து

நவம்பரில் தேர்தலை நடத்த

## கூட்டணிகளுக்கு அழைப்பு



நாட்டின் மூன்று கட்சி கூட்டணிகளின் அரசாங்கத்தை கலைத்துவிட்டு, நவம்பரில் புதிய தேர்தலை நடத்துவதற்கு, ஐஸ்லாந்து பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே, அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

வெளியுறவுக் கொள்கை, புகலிடம் கோருவோர் மற்றும் எரிசக்தி தொடர்பான பிரச்சினைகளில் இடது-வலது கூட்டணிக்குள் சிக்கல்கள் அதிகரித்துள்ளன என்றும் கூறினார்.

முதலாவது போட்டியில்

# இலங்கையை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்



இலங்கைக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், தம்புள்ளயில் ஞாயிற்றுக்கிழமை(13) நடைபெற்ற முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இலங்கை: 179/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: சரித் அசலங்க 59 (35), கமிந்து மெண்டிஸ் 51 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 1/16 [2], ஷாமர் ஜோசப் 1/27 [4], றொஸ்டன் சேஸ் 0/29 [4])

மே. தீவுகள்: 180/5 (19.1 ஓவ.) (துடுப்பாட்டம்: பிறெண்டன் கிங் 63 (33), எவின் லூயிஸ் 50 (28) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: கமிந்து மெண்டிஸ் 1/14 [2], மகேஷ் தீக்‌ஷன 1/31 [4])

போட்டியின் நாயகன்: பிறெண்டன் கிங்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

# இம்மாத சிறந்த வீரர் கமிந்து மெண்டிஸ்



இலங்கை அணியின் சகலதுறை வீரர் கமிந்து மெண்டிஸ், ஐ.சி.சியின் செப்டெம்பர் மாதத்துக்கான சிறந்த வீரராக தெரிவாகியுள்ளார்.

குறித்த விருதுக்கு அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ட்ரவிஸ் ஹெட், இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய ஆகியோரும் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் இருவரையும் வெற்றிகொண்டு கமிந்து மெண்டிஸ் ஐசிசியின் செப்டெம்பர் மாதத்துக்கான அதி சிறந்த வீரர் விருதை தனதாக்கிக்கொண்டார்.

கமிந்து மெண்டிஸ், 2024ஆம் ஆண்டில் இந்த விருதை பெறும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடர்:

# அடுத்த சுற்றில் கற்பிட்டி அல் அக்ஸா

■ எம்.யூ.எம்.சனூன்



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் அடுத்த சுற்றுக்கு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை தகுதி பெற்றுள்ளது.

அனுராதபுரத்தில் வெள்ளிக்கிழமை (11) நடைபெற்ற தமது முதலாவது போட்டியில், தேசிய ரீதியில் பலம் பொருந்திய மாவனல்ல சாஹிரா தேசிய கல்லூரியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே அல் அக்ஸா அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.



ஷங்காய் மாஸ்டர்ஸ்:

# ஜோக்கோவிச்சை வென்று சம்பியனான சின்னர்

ஷங்காய் மாஸ்டர்ஸ் தொடரில் உலகின் முதல்நிலை வீரரான ஜனிக் சின்னர் சம்பியனானார்.

ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்ற இறுதிப் போட்டியில் நான்காம் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச்சை எதிர்கொண்ட இத்தாலியின் சின்னர், 7-6 (4), 6-3 என்ற நேர் செட்களில் வென்று சம்பியனானார்.

இங்கிலாந்துக்கெதிரான அடுத்த இரண்டு டெஸ்ட்களிலிருந்து

## பாபருடன் நசீம், ஷகீனும் நீக்கம்



இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது, மூன்றாவது டெஸ்டுக்காக பாகிஸ்தான் குழாமிலிருந்து பாபர் அஸாமுடன் நசீம் ஷா, ஷகீன் ஷா ஆகியோரும் நீக்கப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரையில் அறிமுகத்தை மேற்கொள்ளாத சகலதுறைவீரர் கம்ரான் குலாம், விக்கெட் காப்பாளர் ஹசீபுல்லாஹ், சுழற்பந்துவீச்சாளர் மெஹ்ரான் மும்டாஸ் ஆகியோருடன் சுழற்பந்துவீச்சாளார் சஜிட் கானும் குழாமுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சஃப்ராஹ் அஹ்மட்டும் குழாமில் இடம்பெறவில்லை.

பெண்களுக்கான மரதன்

# உலக சாதனையை முறியடித்த சப்பிங்யாங்டிச்



பெண்களுக்கான மரதனின் உலக சாதனையை ஐக்கிய அமெரிக்காவின் சிக்காக்கோவில் கென்யாவின் ருத் சப்பியாங்டிச் ஞாயிற்றுக்கிழமை (13) முறியடித்தார்.

கடந்தாண்டு ஜேர்மனின் பேர்லினில் எதியோப்பியாவின் டிக்ஸ்ட் அசீஃபா இரண்டு மணித்தியாலங்கள் 11 நிமிடங்கள் 53 செக்கன்களில் கடந்ததே சாதனையாகக் காணப்பட்டிருந்த நிலையில், இரண்டு மணித்தியாலங்கள் ஒன்பது நிமிடங்கள் 56 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து சப்பியாங்டிச் சாதனை படைத்திருந்தார்.

போட்டித் தூரத்தை சப்பியாங்டிச்சின் நேரப் பெறுதியை விட ஏழு நிமிடங்கள் 36 செக்கன்கள் தாண்டிக் கடந்த எதியோப்பியாவின் சுடுமெ கெபெடி இரண்டாமிடத்தையும், இரண்டு மணித்தியாலங்கள் 17 நிமிடங்கள் 51 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்த கென்யாவின் ஐரீன் செப்டாய் மூன்றாமிடத்தைப் பெற்றிருந்தார்.

ஆண்களில் கென்யாவின் ஜோன் கொரிர் போட்டித் தூரத்தை இரண்டு மணித்தியாலங்கள் இரண்டு நிமிடங்கள் 44 செக்கன்களில் கடந்து முதலாமிடத்தைப் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 15, ஒக்டோபர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.